திருவள்ளுவர் ஆண்டு 2045

செப்டம்பர் - 2015


# செந்தமிழ்

## திங்கள் இதழ்

தொகுதி : 109

பகுதி : 09

விலை ரூ.10/-



MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

# மதுரைத் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| மாட்சிமை தங்கிய மன்னர் நா.குமரன்சேதுபதி M.B.A., | தலைவர் |
| மருத்துவர் ந.சேதுராமன் M.S., M.Ch. (Uro), MNAMS. (Uro), FICS | துணைத் தலைவர் |
| திரு. ச.மாரியப்ப முரளி M.A.,B.L., | செயலாளர் |
| திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி M.Sc., M.Phil., | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக் | உறுப்பினர் |
| திரு. மருத்துவர் மு.அம்மமுத்துப்பிள்ளை | உறுப்பினர் |
| திரு. ச.பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. க.சி. அகமுடைநம்பி B.E., | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. கே.ஆர்.என். கருணாகரன் M.B.A., M.L., | உறுப்பினர் |
| திரு. அழ.சித்தையா | உறுப்பினர் |
| திரு. பெ.சந்திரசேகரன் | உறுப்பினர் |

# செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 109

பகுதி : 09

செப்டம்பர் : 2015

திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2045




வள்ளல் பாண்டித்துரைத் தேவர்

21.03.1867 - 02.12.1911

| இதழ்க்கட்டணம் | உள்நாடு | | வெளிநாடு | |
|---|---|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. | 100 | ரூ. | 600 |
| ஆயுள்கட்டணம் | ரூ. | 1,000 | ரூ. | 6,000 |
| புரவலர் கட்டணம் | ரூ. | 5,000 | ரூ. | 10,000 |
| தனி இதழ்க்கட்டணம் | ரூ. | 10 | | |


செயலாளர்

**ச.மாரியப்ப முரளி,** எம்.ஏ.,பி.எல்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

பதிப்பாசிரியர்

பேராசிரியர். **இரா.சதாசிவம்**

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 625 001.

# பொருளடக்கம்

1. கவுடிலீயமும் முப்பாலும் 7
பேராசிரியர் தி.முருகரத்தனம்

2. புரட்சிக்கவிஞரின் பெண்ணிய புதுமைக் கருத்துகள் 15
முனைவர் கோ.விசயராகவன்

3. பேரா. க.வெள்ளைவாரணனாரின்
தொல்காப்பியப் புறத்திணையியல் உரை நுண்திறன் 22
முனைவர் உ.கருப்பத்தேவன்

# இதழ் மணம்

கவுடிலீய அர்த்த சாத்திரத்தையும் திருக்குறளையும் ஒப்பிட்டுப் பேராசிரியர் தி.முருகரத்தனம் அவற்றின் குறைநிறைகளை எடுத்துரைக்கும் திறனை இக்கட்டுரையை ஆழ்ந்த கற்போர் நுண்ணிதின் உணரலாம்.

கவுடிலீய அரசநீதி என்பது அரசனுடைய வெற்றிக்கும் அவனுடைய நலத்திற்கும் உரிய பாதுகாப்பான கோட்பாடுகளை விளக்கும் பழைய சாத்திரம் என்பதும் காலத்திற்கு ஒவ்வாத மன்னனுக்குக் கைகாட்டியாக அமைந்துள்ளதைத் தெளிவுபடுத்துகின்றார். அது மக்கள் நல அரசுக்கு ஒவ்வாத நடைமுறைகளைப் பேசும் மறம் கூறும் நூலே அன்றி அறம் கூறும்நூல் அல்ல என்பதும் விளக்கப்படுகிறது. திருக்குறள் பழைய சாத்திரப் பழஞ்சரக்குகளை வடநூல்களைத் தழுவி வடநாட்டிலிருந்து இறக்குமதி செய்து தன்னகத்தே கொண்டு விளக்கவில்லை. மிகப்பழைய நாட்களிலேயே அறம்பாடிற்று. மக்கள் நன்மையை முன்னிறுத்தி அரசு முறை செய்து காப்பதுடன் மக்கள் நலவாழ்வுக்குரிய ஆக்கப்பூர்வமான நடைமுறைகளைக் கடைப்பிடிக்கின்ற பக்குவத்தை அரசனுக்கு எடுத்துரைக்கும் அரசியல் சமுதாய விளக்க நூலாகத் திருக்குறள் திகழ்வதைப் பேராசிரியர் விளக்கியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இன்றைய அரசியலாகும் உளம் கொள்ள வேண்டிய சமூகப் பொருளாதார மக்கள் நலக்கோட்பாடுகளைத் திருக்குறள் வலியுறுத்தும் திறத்தினை ஆசிரியர் விளக்கியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இக்கட்டுரையை ஒப்பாய்வு நோக்கில் சிந்திக்கும் மாணவர், ஆசிரியர் படித்துப்பயன் கொள்ளலாம்.

முனைவர் கோ.விசயராகவன், "புரட்சிக் கவிஞரின் பெண்ணியப் புதுமைக் கருத்துக்கள்" என்னும் கட்டுரை வரைந்துள்ளார். பாரதிதாசன் கவிதைகள் பெண்களுக்குரிய உரிமையை நிலைநாட்டவும் போராடவும் தமிழ்ச் சமுதாயத்தைத் தூண்டியது. குடும்ப விளக்கு, தமிழச்சியின் கத்தி போன்ற புதுமைப் புடைப்புக்கள் பெண்களுக்கு வாழ்வுரிமையைப் பெற்றுத் தந்தது; ஆண் ஆதிக்கம் தளர்ந்தது. பெண்விடுதலை முழக்கம் எங்கும் ஒலித்தது.

பேராசிரியர் க.வெள்ளைவாரணனாரின் தொல்காப்பியப் புறத்திணையியல் உரை மாண்பு குறித்து முனைவர் உ. கருப்பத்தேவன் வரலாற்றுப் பார்வையோடு கட்டுரை வரைந்துள்ளார். கற்று மகிழ்க.

# கவுடிலீயமும் முப்பாலும்

- பேரா.தி.முருகரத்தனம்

**1. வள்ளுவரது முப்பாலின் தோற்றம் எங்கனம்?**

இந்தியப் பண்பாட்டுப் புலத்தில், எண்ணக் கோட்டத்துள், அறிவு சூழ்புலத்தில் திரிவர்க்க புருடார்த்தங்கள் பற்றிய நூலாக்கங்கள் சில பல தோன்றியுள்ளன. தர்மார்த்த காமங்களுக்கு முன்னோடி நூல்கள் இருந்துள்ளன. தர்மசாத்திரத்திற்கு வேதவழிப்பட்ட நூல்களும் அர்த்த காமசாத்திரங்களுக்கு உலோகாயத பிரஹஸ்பதி, சுக்கிரர் வழிப்பட்ட கருத்தாக்கங்களும் முன்னோடிகளாக இருந்திருக்கின்றன. **கவுடிலீய அர்த்த சாத்திரம் பிரஹஸ்பதிக்கும் சுக்கிரர்க்கும்** வணக்கம் சொல்கின்றன. வடபுலத் திரிவர்க்கங்களின் மரபினை இவற்றால் அறியலாம்.

வள்ளுவர் அறம், பொருள் இன்பம் ஆகிய முப்பால் - திரிவர்க்கம் - வரைந்தார். அவர் வரைவிற்கு, நூலாக்கத்திற்கு முன்னோடி மரபு யாதாவது பற்றி அவர் பேசியுள்ளாரா? முப்பாலைக் கற்பித்த தன் குரு பற்றி ஆசான் பற்றி - அவர் பேசியுள்ளாரா? இல்லையே! அவர் வரைந்த பொருட் பாலுக்கு முன்னோடி கவுடிலீய அர்த்த சாத்திரமே ஆகலாம். கவுடிலீயம் தென்னாட்டில் வழக்கில் இருந்துள்ளது. கவுடிலீய சாணக்கியர்க்கு 'த்ரமிள' என்னும் பெயரும் வழக்கில் இருந்துள்ளது. வள்ளுவர் கவுடிலீயம் கற்றறிந்திருந்தார் ஆதல் வேண்டும். ஆனாலும் அதுபற்றி அவர் பேசவில்லை. குற்றம் சொல்ல வேண்டாம். அர்த்தசாத்திரம் பண்பாட்டுலகில் பறந்து திரியும் கருத்தாக்கமோ, floating ideology? **வள்ளுவருடைய** அறிவியல்சார் கொடையை எங்கனம்தான் அளவிடுவது! தர்மார்த்த காம புருடார்த்தங்கள் பற்றித் தனித்தனியே - ஒவ்வொரு புருடார்த்தம் பற்றியும் தனித்தனியே - நூலாக்கங்கள் தோன்றின; ஆக்கினோரும் தனித்தனி ஒருவர்; தனி ஒருவர்! திரிவர்க்கம் ஒற்றைக் கருத்தாக்கமுமாம், *இந்தியப் பின்புலத்தில் திரிவர்க்கம் பற்றி* ஒருவரே ஒற்றை நூலாக்கியது இல்லையே; இல்லையே! யாராயினும் உளரோ? உண்டோ? உளர். அவர்தான் தமிழர், வள்ளுவர். வள்ளுவத் தமிழர்க்கு எங்கனம்தான் இவ் எண்ணம், முயற்சி தோன்றினவோ; திரிவர்க்கம் பற்றி, முப்பால்கள் பற்றி, அவைகளை இணைத்துப் பேசும் ஒருநூல் **வள்ளுவர்** முப்பால்; இந்தியப் பண்டைய, இன்றைய அறிவு சூழ் புலத்தில் **வள்ளுவரின்** முப்பால் ஒன்றே - ஏன் இந்த வையத்திலும் ஒன்றே -

ஒருவரால் ஒருபார்வையில் - ஒற்றைப் பார்வையில் ஆக்கம் பெற்றுள்ளது. தமிழர்க்கும் பெருமை; தமிழரின் கொடை!

முழுமை முப்பாலை வள்ளுவத் தமிழர் முன்னோடிகளைப் படி எடுத்தார் என்பதல்ல இந்த வரலாறு. **வள்ளுவர்** படி எடுக்கவில்லை. அவர் திரிவர்க்கத்தை, முன்னை ஆக்கங்களை - துவைத்தார்; தூசுதட்டினார்; கழுவினார்; கழித்தார்; துப்பாக்கினார்; இந்திய மரபில் இத்துப்புரவுப் பணியைப் பிறர் செய்யவில்லை; செய்ய இயலவில்லை. **வள்ளுவர்** செய்தார்; வழங்கினார். பிறர் செய்யாமைக்கு அறிவுசார் பூசல் - சமயப் பூசல் - காரணம்? சமயப்பித்து (Religiosity) காரணம்? 'மதம் எனும் பேய் பிடித்தாட்ட ஆடினோமா!' - (இராமலிங்க அடிகளார்).

தமிழில் முப்பால் நூல் வரைவதற்கு என்ன கருத்தாக்க மரபு இருந்தது; வள்ளுவர் என்ன/ எந்த மரபினைப் பின்பற்றினார்? முப்பால்/ நாற்பால் மரபு இந்திய வடபுலத்திற்கே உரியது. தொல்காப்பியமும் பழந்தமிழிலக்கியமும் இதனைச் சுட்டியுள்ளன. அவை அவ்வளவே. அகம் புறமே தமிழர் மரபு. திரிவர்க்கத் தோற்ற வரலாறு எங்கு செல்கிறது? வடபுலத்தில் மவுரிய அரசாட்சி போன்ற ஆட்சி மரபுகளே அர்த்த சாத்திரம் தோன்றுவதற்குக் காரணமாகும். வைதிக சமய மரபே தர்மசாத்திரங்கள் தோன்றுவதற்குக் காரணம். இத்தகைய சமூகச் சூழல்கள் தென்புலத்தில் - தமிழகத்தில் - தோன்றவில்லை. மவுரிய அரசும் ஆட்சியும் பேரரசாகத் தோற்றம் பெற்றன. அவ் ஆள்வோருக்கு அறிவுரை வழங்கும் தேவை தோன்றியது. மவுரிய மன்னனுக்கு ஆட்சி நடைமுறைகளை அறிவுறுத்த அம்மன்னனின் அமைச்சனாக இடம்பெற்ற சாணக்கியன் அம்மன்னனுக்கு, மன்னிளங் குமரர்க்குத் தேவையான கல்வி அறிவுரைகளைத் தொகுத்துத் தந்தான். அந்தத் தொகை நூலாகியது; விரிந்தது; வளர்ந்தது; ஆள் வோருக்குக் 'கைகாட்டி' (Guide) ஆனது. மன்னன் ஒருவனுக்கு அண்மையில் ஒட்டி இருந்த அமைச்சன் இயற்றியதுதான் அது. அந்நூல் மன்னனது நன்மையையே - மன்னன் நலம் ஒன்றையே - பேசும் தேவை ஏற்பட்டது; **கவுடிலீயம்** தோன்றியது; தென்னகமும் வந்தது. அதனுள் இங்குக் குறையும் நிறையும் கண்டனர். காஞ்சித் **தண்டி** அது பற்றிக் கிண்டலடித்தார். வள்ளுவர் குறை களைந்து நிறை விளைத்தார்.

**2. பொருளின் பொருண்மை:** சமஸ்கிருத வடமொழியில் 'அர்த்தம்' என்னும் சொல்லுக்குப் பல பொருண்மைகள் இருப்பது போன்று தமிழ்ச்சொல் 'பொருளு'க்கும் பல பொருண்மைகள் வழங்குகின்றன. 'பருப்பொருள்', 'நோக்கம்', 'பொருண்மை' (meaning), 'செல்வம்', 'மதிப்பு' (Value in general sense) எனப் பல வழக்குகளைத் தமிழிலும் காணலாம்.

மன்பதை வாழ்க்கைக்கு உரிய அறநெறிகள், காதல், காமம் ஆகியவற்றுக்கு உரியவை அல்லாத வாழ்க்கைக் கூறுகளைப் 'பொருள்' என இங்குக் குறிப்பதாகக் கொள்ளலாம். 'அர்த்தம்' என்னும் வடமொழிச் சொல்லின் நேர் பெயராகப் 'பொருள்' என்னும் தமிழ்ச்சொல் ஆக்கப் பட்டிருக்கலாமோ?

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி பொருள் என்பதன் கீழ் 27 பொருண்மைகளைத் தொகுத்துத் தந்துள்ளது. பொருள் என்னும் சொல் பொருண்மையால் 'ஆகுபெயர்களாக' விரிந்து வளர்ந்துள்ளது. இடந்தொறும், காலந்தொறும், தெளிவிற்குச் சிலவே தேவை. இருபத்தாறாவது பொருண்மையாக 'அர்த்தசாஸ்திரம்' குறிக்கப் பட்டுள்ளது, இவ்வகராதியில்.

வடமொழியில் அர்த்த சாத்திரங்கள் செல்வத்தை ஆக்கல் - படைத்தல் பற்றிப் பெரிதாகப் பேசுகின்றன. செல்வம் படைத்தல் 'அர்த்தம்' ஆகலாம். தமிழிலும் செல்வத்தைக் குறிக்கும் பொருண்மையில் 'பொருட்பாலின்', 'பொருள்' ஆக்கம் பெற்றிருக்கலாம்.

**3. நாடும் ஆள்வோனும் – உறவு:**

அர்த்த சாத்திரம் நாடாள்வோனையே முதன்மைப்படுத்திப் பேசுகின்றது என்று அல்லவா காணப்பட்டது. 'நாடு, ஆளும் மன்னனுக்கா; மன்னன், ஆளும் நாட்டுக்கா' என்னும் வினாக்கள் அர்த்த சாத்திரத்தில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. நாடு மன்னனுக்கே ஆகுமாம். அதனால் அறநெறி அரிது; மறநெறி பெரிது என்றல்லவோ ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டுகின்றனர்! வள்ளுவர் ஆட்சித்தலைவனிடம் - இறைவனிடம் - நாட்டின் நலமே, குடிமக்களின் நலமே குடிகொண்டிருத்தல் வேண்டும் என்கிறார். அர்த்த சாத்திரத்தில் வள்ளுவர் செய்யும் திருத்தம் இது; ஒளி ஊட்டுகிறார்.

*கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்*
*உடையானாம் வேந்தர்க்கு ஒளி.* *(இறைமாட்சி)*
*முறைசெய்து காப்பாற்றும் மன்னவன், மக்கட்கு*
*'இறை'என்று வைக்கப் படும்.* *(இறைமாட்சி)*
*அறன்இழுக்காது அல்லவை நீக்கி மறன்இழுக்கா*
*மானம் உடையது அரசு.* *(இறைமாட்சி)*

இவர்களே வள்ளுவர் காட்சிப்படுத்தும் மன்னர்கள். மேலும் அவர் மன்னர்க்குப் பண்பாடாகப் பரப்புரை செய்யும் புத்தாக்க எண்ணக் கோளம் இந்தப் பத்துக்கள்: 'செங்கோன்மை', 'கொடுங்கோன்மை', 'வெருவந்த செய்யாமை', 'கண்ணோட்டம்', (கோன்மை வள்ளுவரின்

புத்தாக்கம், கோல் என்பது தண்டம்; தண்டநீதி சுட்டும்).

*ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்*
*தேர்ந்து செய்வஃதே முறை.* (செங்கோன்மை)

*குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்*
*அடிதழீஇ நிற்கும் உலகு.* (செங்கோன்மை)

*இறைகாக்கும் வையகம் எல்லாம்; அவனை*
*முறைகாக்கும், முட்டாச் செயின்.* (செங்கோன்மை)

*மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதுஇன்றேல்*
*மன்னாவாம் மன்னர்க்கு ஒளி.* (கொடுங்கோன்மை)

*நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்*
*நாள்தொறும் நாடு கெடும்.* (கொடுங்கோன்மை)

*தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்*
*ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து.* (வெருவந்த செய்யாமை)

*கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு*
*உரிமை உடைத்துஇவ் உலகு.* (கண்ணோட்டம்)

வள்ளுவர் காட்சிப்படுத்தும் நாடாளும் மன்னன், கையில் நேரிய செங்கோல் பிடித்து அறம் பிறழாது முறை செய்து அச்சம் இல்லாத ஆட்சி தந்து கழிவிரக்கம் என்னும் கண்ணோட்டமும் காட்டிக் கொடை அளித்து 'இவனே இறைவன்' (தலைவன்) எனக் குடிமக்களால் கொள்ளப்படு வோனே ஆவன். 'மாற்றான் வலியனானால் பகை வேண்டா; மாற்றான் மெலியனானாலும் பகை போர் வேண்டா' என்பது மன்னர்க்கு வள்ளுவரது அறவுரை:

*வலியார்க்கு மாறுஏற்றல் ஓம்புக; ஓம்பா*
*மெலியார்மேல் மேகல் பகை.* (பகைமாட்சி)

(மேகல் - மேகாதே)

கவுடில்யம் காட்டும் காவலன் - மன்னன் - விஜிகீஷு - வெற்றி வெறியன் - வள்ளுவர் படைத்த பாராள்வோன் வேறானவன் தானே!

**4. எழுகூறுகளில் வள்ளுவர் ஏற்றவை**

வள்ளுவர் முப்பாலின் பொருட்பாலில் முதற்பாவே அவர் பார்வையில் கொண்ட பொருட்பாலைத் தொகுத்துச் சொல்லிவிடுகிறது.

படைகுடி, கூழ்அமைச்சு, நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு. (இறைமாட்சி)

இவ்ஆறும் உடையானே பெருவேந்தன். வள்ளுவர் இவை

அனைத்தையும் விரித்துப் பேசவில்லை. படை, அரண், சூழாகிய செல்வம் ஆகியவற்றைச் சுருக்கியே அவர் வழங்குகிறார். செல்வமாவது வரிவழி, பிறவழியில் மன்னன் ஈட்டுவது. இப்பொருளாதாரத்தை அர்த்த சாத்திரங்கள் விரித்துப் பேசுகின்றன. இப்பேச்சில் அறமும் உண்டு; மறமும் உண்டு; வள்ளுவர்க்கு அவை உடன்பாடில்லை; அவர் சுருக்குகின்றார்.

*செய்க பொருளை; செறுநர் செருக்கு அறுக்கும்*
*எஃகுஅதனின் கூரியது இல்.* (பொருள் செயல் வகை)
*ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்*
*ஏனை இரண்டும் ஒருங்கு.* (பொருள் செயல் வகை)

என்னும் அளவில் மட்டுமே வள்ளுவர் நிற்கிறார். செல்வத்தின் சிறப்பையும் தேவையை மட்டும் அவர் எடுத்துரைக்கிறார்.

வள்ளுவர் 'இன்னா செய்யாமை', 'கொல்லாமை', 'அருளுடைமை' ஆகியவற்றைப் பேரறமாகக் கொண்டவர்.. படையும், பகையும், அரணும், மாண்பு - மாட்சி - உடையவையாக, நாடு காவலுக்கு மட்டும் உரியவை யாக இருத்தல் போதும் என்கிறார் போலும் அவர்.

*ஆற்று பவர்க்கும் அரண்பொருள்; அஞ்சித்தன்*
*போற்று பவர்க்கும் பொருள்.* (அரண்)
*உறுப்புஅமைந்து ஊறுஅஞ்சா வெல்படை, வேந்தன்*
*வெறுக்கையுள் எல்லாம் தலை.* (படை மாட்சி)

வள்ளுவர் உள்ளம் ஒளிர்கிறது.

**5.அர்த்தசாத்திரத்தின் தோற்றம், சூழல்:**

தமிழகத்தில் அர்த்தசாத்திரம் தோன்றவில்லை. புறப்பொருள் தோன்றியது; புறப்பொருட் புறநானூறு தோன்றியது. புறநானூறு கவின்கலைப் பனுவல் - இலக்கியம், வரலாறுமாம். அர்த்தசாத்திரம் கோட்பாட்டுக் கருத்தாக்கக் கையேடு; பாடநூல் ஏடு - Treatice of Principles - மவுரியப் பேரரசு போன்று தமிழகத்தில் பேரரசு தோன்ற வில்லை. ஆதலால் தமிழகத்தில் அர்த்தசாத்திரம் தோன்ற வாய்ப்பு அமையவில்லை.

முப்பால் - திரிவர்க்கம் தமிழகத்தில் இறங்கின. இறக்கப்பட்டன. இவை புதுமரபின. வள்ளுவச் செந்தமிழர் இவற்றைக் கேட்டார்; கற்றார், அறிந்தார். இவற்றை வள்ளுவர் தமிழகத்திற்கு அறிமுகம் செய்தல் வேண்டும் என எண்ணினாரோ என்னவோ? அவற்றைச் சீர்திருத்திக் கழிப்பன கழித்து, துப்புரவுபடுத்தி வழங்கல் வேண்டும் என அவர்

எண்ணியிருக்கலாம்; முப்பாலை வரைந்தார்.

வள்ளுவரது முப்பால் 700 இரட்டை வரிப்பாடல்கள் கொண்டது; அளவில் சிறிது; ஆனால் தகுதியில் பெரிது; சிறப்பானது. **கவுடிலீய அர்த்த சாத்திரம்** வள்ளுவரது பொருட்பாலை விட இருபது மடங்கு பெரிதாகத் தோன்றுகிறது. சுக்கிர நீதியும் பெரிது. ஆகவே கழிவுகள் பல வள்ளுவர் உடன்படாதவை பல. வள்ளுவர் அறநெறிகளுக்கே முதலிடம் தருகிறார். மன்பதைச் சமூகநலமே போற்றுகிறார்.

## 6. அர்த்த சாத்திரம் – வள்ளுவர் கழித்தல்:

காலம் மாறியது; இடமும் ஏற்ற பண்பாடும் மாறின. வள்ளுவர் தக்கவை தேர்ந்தார்; தமிழகத்துக்கு ஒத்தவற்றை இயற்றினார். அவர் கழித்தவை காண்போம்.

1. இளவரசனுக்குப் பட்டம் சூட்டுதல், அதற்கான சடங்குகள் இயற்றுதல் ஆகியவற்றை வள்ளுவர் புறக்கணித்தார். பட்டம் சூட்டலில் பெயர் மாற்றம், பூணூல் அணிவித்தல், தெய்வாம்சம் கற்பித்தல் உளவாகலாம். இவை பிராமணியம்; வள்ளுவர் துகைத்தார்.

2. மன்னனின் நாட்கடமைகளான பள்ளி எழுந்தது முதலான படுக்கை அறை நிகழ்ச்சிகளும் கடமைகளும் அர்த்தசாத்திரத்தில் பட்டியல் இடப்படுகின்றன. இவை தக்க அரசியற் கருத்தாக்கங்களாக இல்லை.

3. போர்முறைகள், போர்க்களங்கள், எங்கு எங்கனம் எப்பொழுது கள் நடைபெறும் என்றெல்லாம் அர்த்தசாத்திரம் விரித்துப் பேசும். இம் முறைகள் பற்றி வள்ளுவர் பேசவில்லை; போரே வேண்டாம் என்கிறாரோ வள்ளுவர்! ஆனால் 'படைமாட்சி', 'படைச்செருக்கு' பற்றி அஃதாவது காவலுக்கும் போருக்கும் படை தேவையானால் அவை தகுதியுடை யனவாக இருத்தல் வேண்டும் என்கிறார் வள்ளுவர். அவர்தான் 'இன்னா செய்யாமை', 'கொல்லாமைக் கோட்பாடு' கொண்டவர் ஆயினரே! அதன் எதிரொலி கேட்கின்றோம்.

## 7. சட்டநூலா? முறை காக்கும் நூலா?

அர்த்தசாத்திரம் குடிமக்களிடையே நிகழும் குறைகளையும் குற்றங்களையும் காண்கிறது; அவற்றுக்கான தண்டனைகளையும் வழங்கு கிறது; அவற்றுக்கான சட்டங்களையும் வகுத்துக் கொண்டுள்ளது. அர்த்த சாத்திரம் ஒரு சட்ட நூலாகவும் இயங்குகிறது. கொலை, கொள்ளை, ஏமாற்றல் முதலானவைகளைக் கண்டு அவற்றுக்கான தண்டனைகளை வழங்குவதால் அர்த்த சாத்திரத்திற்குத் 'தண்டநீதி' என்னும் பெயர் வழக்கு உண்டு. வள்ளுவர் முப்பால் சட்ட நூலாக - தண்ட நீதியாக - அமைத்துக் கொள்ளப்படவில்லை; தம் பணியாக மேற்கொள்ளவில்லை.

சட்டங்கள் காலந்தொறும் இடம்தொறும் இனம்தொறும் வேறுபடுமா! ஆனால் ஆட்சியில், நாட்டில் முறை நிகழ்தல் வேண்டும் என்பது **வள்ளுவர்** கருத்து. 'முறை', என்பது குற்றமும் குறையும் சாரா நேர்மையைக் குறிக்கும்; சட்டமுறையையும் குறிக்கலாம். முறை செய்தலும் முறை காத்தலும் நாடாளும் மன்னனின் பொறுப்பு என்கிறார் வள்ளுவர். ஆங்காங்கே இம் 'முறை'யே ஆள்வோனை மன்னனைக் காக்கும் என்பது அவர் கருத்து:

*இறைகாக்கும் வையகம் எல்லாம்; அவனை*
*முறைகாக்கும் முட்டாச் செயின். (செங்கோன்மை)*

*எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்,*
*தண்பதத்தான் தானே கெடும் (செங்கோன்மை)*

*ஓர்ந்துகண் ஓடாது இறைபுரிந்து யார்மாட்டும்*
*தேர்ந்து செய்வஃதே முறை. (செங்கோன்மை)*

வள்ளுவர் ideal values காணச் செய்கிறார்.

**8. செல்வம் ஈட்டல் – தீமை வழி:**

அர்த்தசாத்திரம் நாட்டு நடைமுறையைப் பேசுகிறது. நாட்டு நடைமுறையை வளப்படுத்தி நாடாளும் மன்னனுக்கு வளம் சேர்க்கும் நோக்கம் கொண்டது அது. வளம் ஆக்கும் பணிகளில் அர்த்த சாத்திரம் அன்பும் அருளும் பிற சமூக நல்ல ஒழுகலாறுகளும் காண்பதில்லை; செல்வம் ஈட்டலும் நோக்கம். சூதாட்டம், கள்ளுக்கடை, பரத்தையர் இல்லம், ஆடு மாடு புலால் விற்பனை முதலானவை தீய பழக்கங்கள் என அர்த்தசாத்திரம் கருதுவதில்லை. தவக்கோலத்தையும் செல்வம் ஈட்டலுக்கும் மாற்றாரை ஏமாற்றுதலுக்கும் கெடுத்தலுக்கும் அது பயன் படுத்துகின்றது. வள்ளுவர் 'கள்ளுண்ணல்', 'கூடா ஒழுக்கம்', 'சூது', 'வரைவு இல் மகளிர்' ஆகியவற்றைக் கடியும் உயர் நோக்கம் (idealism) கொண்டவர். அன்றும் இன்றும் இவை ஆட்சியாளர்க்கு 'வைப்பாட்டிகள்', வள்ளுவர்க்குக் 'கொடுவாட்டினர்'!

**கவுடிலீய அர்த்தசாத்திரம்** சமயத்தையும், கடவுள், கோயில், துறவியர், பூசாரி, யாகம்... முதலானவற்றைப் பயன்படுத்தி மாற்றாரையும் மக்களையும் ஏமாற்றலாம் என்கிறதல்லவா! **வள்ளுவர்** முப்பாலில் இத்தகைய சமயமும் இல்லை; ஏமாற்றலும் இல்லை. **வள்ளுவர்** சமயம் தான் என்ன எது என்பதும் காட்டப்படவில்லை அல்லவா. ('ஆதிபகவன்' யாரோ; யாருக்கோ!) (நாடோள்வோருக்குச் சமயம் என்னும் 'வாக்கு வங்கி' கூடாது என்பது **வள்ளுவர்** குறிக்கோள்.)

ஆனாலும் கவுடிலீய அர்த்தசாத்திரம் மேற்கண்ட கொடுமைகளுள் கடுமை இருத்தலைக் கடிகிறது. மகளிர்க்குச் சில உரிமைகளைத் தருகின்றதல்லவா! போற்றலாம். வள்ளுவரும் 'வரைவு இல் மகளிர்' என்னும் பத்தில் காமப் பரத்தமையைக் கடிந்து அதற்குமுன் 'பெண்வழிச் செல்லுதல்' (காதல், காமம்?) பத்தினை வைத்து மனையாள் உறவால் கணவன் வினைகளை (தொழில், பொருளீட்டல், காவல்...) இழக்காது 'வினையாண்மை வீறு எய்தல்' வேண்டும் என்கிறார். இங்கும் கடுமை கடியப்படுகிறது.

**9. நாடு கவர்தல்: கவுடிலீய அர்த்தசாத்திரம்**

'விஜிகீஷு' என வழங்கப்படும் 'வல்லாண்மை வெற்றிப் பற்றாளன்' (பித்தன்) பற்றியும் ஏழு நாடுகள் அடங்கிய மண்டலம் பற்றியும் நட்பும் பகையால் அவற்றை வென்று அடக்கி ஒன்றைப் பேரரசன் ஆதல் பற்றியும் பேசும் கருத்துக்களுள் யாதொன்றும் வள்ளுவர் முப்பாலின் பொருட்பாலில் பேசப்படவில்லை. வள்ளுவர் நட்பு பற்றியும் பகைமை பற்றியும் 'நட்பு, நட்பாராய்தல், பழைமை, தீநட்பு, கூடாநட்பு, பேதைமை, புல்லறிவாண்மை, இகல், பகைமாட்சி பகைத்திறம் தெரிதல், உட்பகை' ஆகிய பத்துக்களில் விளக்கிப் பேசுகிறார். இவை பெரும்பாலும் மக்களிடையே உள்ள உறவாகப் பொதுமைப்படுத்தப்பட்டு ஆங்காங்கே ஆள்வோர் ஆட்சிமுறை பற்றிப் பேசுகின்றன. இவற்றுள் ஆட்சி நலம், நாட்டு நலமே பேசப்படுகின்றன. மன்னனை முற்படுத்தி அவன் நலத்தை ஏற்றியும் போற்றியும் பேசப்படுதல் இல்லை; அறநெறி, பண்பாடு, நேர்மையே பேசப் படுகின்றன. (விஜிகீஷு) எழுமண்டலம், அயலார் அழிப்பு என்னும் கருத்துக்களை வள்ளுவர் துவைத்துத் துகைத்துத் தூக்கி எறிகிறார் எனல் வேண்டும். வள்ளுவர் மறநெறியாளர் அல்லர்; அறநெறியாளர்.

# புரட்சிக்கவிஞரின் பெண்ணிய புதுமைக் கருத்துகள்

முனைவர் **கோ.விசயராகவன்**
இயக்குநர் (ம) பேராசிரியர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை 600 113

பாரதிதாசன் அவர்களைப் 'புரட்சிக் கவிஞர்' என அழைக்கிறோம். *புரட்சி என்பது புதுமை மாற்றக் கிளர்ச்சி.* அதாவது இருந்த ஒன்று வேறு ஒன்றாக மாறுவது; மாற்றுவது; புதுமை பூப்பது. இது அனைத்து உயிர்களுக்கும் பொதுவானது. பாவேந்தர் பாரதிதாசனின் புரட்சி மனம் தமிழில் முளைத்துச் சமுதாயத்தின் பிற துறைகளில் வேரோடியது. புதுமைக்குப் பாதை அமைத்துக் கொடுத்தன அவருடைய படைப்புகள்.

தமிழின் மறுமலர்ச்சி தொடங்கியதும் சொல் புதிதாய் - பொருள் புதிதாய் - சுவை புதிதாய்க் கவிதைகள் தோன்றின. கருத்தில் புரட்சியும், சொல்லில் அமைதியும், உவமையில் புதுமையும் கலந்து தமிழுக்கு அழகு ஊட்டுபவர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். அவருடைய கவிதை களில் எல்லாம் புதுமையான உவமைகள் மலிந்து கிடப்பதைக் காணலாம்.

**புதுமை ஒளிரப் பாடும் புரட்சிக்கவிஞர்**

பாரதிதாசன் அவர்களின் கொள்கைகளில் பலருக்குக் கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால் அவருடைய தமிழ்த் தொண்டில் அவருடைய மேதைமையில் எவருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. மறுமலர்ச்சி என்பதற்காக இலக்கணத்தைப் புறக்கணித்து விடாமல், சொல்லுக்குச் சொல் உயர்வு ததும்பும் வண்ணம் சிறந்த பொருள்களை உள்ளடக்கி நயங்கள் மிகுந்த கற்பனைப் பொலிவுடன் புதுமைக் கவிதைகள் இயற்றுவதில் அவருக்கு நிகர் அவரே ஆவார்.

*"முதுமையிற் புகுந்துள முரண்களை மாற்றி*
*புதுமையிற் பாடும் புரட்சிக் கவிஞன்"*

என்று புரட்சிக்கவிஞரை நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார் போற்றி யுள்ளார்.

*"காற்று வெளியில் கலந்திருந் தாலும்*
*ஊற்றுப் புலவோர் ஒருசில பேரே*

*பாரதி தாசன் பகைவரை எதிர்த்தோன்*

*பழமை புதுமைப் பாலம் அவனே"*

என்று கவிஞர் கண்ணதாசன் அவர்கள் புரட்சிக் கவிஞருக்கு ஒரு புகழ்க் கவிதை பாடியுள்ளார்.

**புரட்சிக் கவிஞரும் பெண்களுக்கான புதுமைக் கருத்துகளும்**

பாவேந்தர் பெண்மையின் பல்வேறு சிறப்புகளையும் உருவகங்களின் மூலம் எடுத்துக் காட்டியுள்ளார். அடைமொழிகள் கொடுத்துச் சிறப்பித்துள்ளார். உவமைகளின் மூலம் விளக்கியுள்ளார். இவரைப் போல் பெண்மையைக் கவினுறச் சிறப்பித்த பாவலர் தற்காலத்தில் வேறு எவருமில்லை எனத் துணிந்து கூறலாம்.

பாவேந்தரின் காலத்தில் 'பெண் தானே!' என்று சிலர் இகழ்ந்து வந்தனர். அவர்களுக்குத் தகுந்த விளக்கம் அளிக்கும் முறையில் "வீரத்தாய்" என்னும் நாடகத்தைப் படைத்தார். காங்கேயன் என்ற முரடன் விசயராணியைப் பெண்தானே என்று பழித்தான். அதைக் கேட்ட அமைச்சர், பெண்களைத் தாம் எளிதாய்க் கருதவில்லை என்று தம் கருத்தைத் தெரிவிக்கிறார். மேலும் விளக்கம் கூறும் முறையில்,

*"மானுடம் மேலென்பார் வன்மையுடைய தென்பார்*

*ஆன அதனை அளித்ததெது? மீனக்*

*கடைக்கண்ணால் இந்தக் கடலுலகம் தன்னை*

*நடக்கும் வகை செய்வதெது? நல்ல தொரு சக்தி*

*வடிவமெது? மாமகளிர் கூட்டமன்றோ? உன்சொற்*

கொடிது! குறையுடைத்து!" (வீ. தாய். ப.37)

என்று மகளிரின் பண்பு நலன்களை அமைச்சர் மூலமாகப் பாவேந்தர் விளக்குகிறார்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிற கவிஞர்களைப் போலவே ஆண் களுக்குச் சரிநிகராகப் பெண்கள் விளங்க வேண்டும் என்று நினைத்தார். அதிலும் புதுமையாகப் "பெண்கள் பெண்களாக விளங்க வேண்டும். பெண்மையோடு, தங்கள் இயல்புக்கும் ஏற்ற பொறுப்பேற்று உயர வேண்டும்" என்றும் விரும்பினார். இரு பாலரும் அவரவர் இயல்போடு சமமாக வாழும் சமுதாயத்தை அவர் விரும்பினார். பெண்களும் ஆண்களும் வேறுபாடற்றவர்களாக மாறும் நிலையை அவர் விரும்ப வில்லை. பெண் ஆணுடையைப் பூண்டதை அவர் வரவேற்கவில்லை. "பெண்மை பெண்மையாக இருக்க வேண்டும். அது தாய்மையாக மலர வேண்டும்" என்றார். தாய்மை, சமத்துவத்துக்கு ஊறு செய்வதை

விரும்பவில்லை. பெண்கள் அன்பால், அறிவால், சமமாக விளங்க வேண்டும் என்றும் விரும்பினார். அவர்கள் தங்கள் பண்பு மாறாமலேயே சமவுரிமை பெறுவதை அவர் விரும்பினார்.

**பெண் கல்வியில் புதுமை**

பெண்களின் அடிமைத்தனத்தைப் போக்க, பிறர் போராடிக் கொண்டிருந்த போது, அவர் பெண்களிடம் உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டி அவற்றைக் களைவதே அவர்கள் அடிமைத்தனத்தைப் போக்க முடியும் என்று கூறினார். இக்குறைக்கான காரணத்தையும் ஆராய்ந்தார், பெண்ணடிமை விரும்பிகள், பெண்கள் கல்வி பயிலுவதை விரும்பவில்லை. பெண்களுக்குக் கல்வி கொடுத்தால் அவர்கள் சிந்திக்கத் தொடங்குவார்கள். அவர்களை அடக்கி ஆள முடியாது என்பதால் பெண் கல்வியை மறுத்தனர். இதனால் பெண்களிடம் பரந்த மனமின்றிப் பிறரிடம் உள்ள குறைகளைப் பெரிதாகப் பேசி மகிழும் குறுகிய உள்ளம் ஏற்பட்டது என எண்ணினார்.

*"புவிக்கொன் றுரைப்பேன் புருடர் கூட்டம்*
*பெண்களை ஆதிப் பெருநாள் தொடங்கித்*
*திருந்தா வகையிற் செலுத்தலால் அவர்கள்*
*சுருங்கிய உள்ளம் விரிந்தபா டில்லையே"* (பா.கவி. 1. ப.54)

எனவே மகளிர்க்கு உரிய கல்வி கொடுக்காமையால் அறியாமை அடைந்து, பெண்கள் சீரான முறையில் சிந்திக்க முடியாத நிலை ஏற்பட்டது என்றார்.

*"கல்வியில் லாத பெண்கள்*
*களர்நிலம்! அந் நிலத்தில்*
*புல்விளைந் திடலாம் நல்ல*
*புதல்வர்கள் விளைதல் இல்லை!*
*கல்வியை உடைய பெண்கள்*
*திருந்திய கழனி அங்கே*
*நல்லறி வுடைய மக்கள்*
*விளைவது நவிலவோ நான்?"* (கு.வி.ப. 69,70)

படித்த பெண்கள் நன்செய் நிலத்திற்கு ஒப்பாவர் என்றும், படிக்காத பெண்கள் களர் நிலத்திற்கு ஒப்பாவர் என்றும் கூறுகிறார் பாவேந்தர்.

எனவே பெண் கல்வியின் சிறப்பை விளக்கவே புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 'குடும்ப விளக்கு' என்னும் உயரிய காவியம் இயற்றினார். 'இருண்ட வீடு' மூலம் பெண் கல்வியின்மையின் இழிவை விளக்கினார். பெண் கல்வி கற்பதன் மூலமே வீடு குடும்ப விளக்காகத் திகழ முடியும் என உறுதியாகக் கூறுகிறார்.

### திருமணங்களில் புதுமைக் கருத்துகள்

திருமணம் என்பது சொர்க்கத்தில் உறுதி செய்யப் பெறுவது ஆண்களுக்கு மட்டுமே. ஏனென்றால் அடிமைப் படுத்தப்பட்டிருந்த பெண்கள் குழந்தை வயதிலே திருமணம் செய்யப்பட்டுக் கணவனை இழந்து மறுமணமின்றிக் கைம்பெண்ணாகத் துன்புற்றிருந்தனர். இதை நீக்கப் பலதார மணம், கலப்பு மணம், விதவை மணம் போன்ற புதுமைத் திருமணங்களைப் பற்றித் தம் பாடல்கள் மூலம் வலியுறுத்தினார் புரட்சிக் கவிஞர்.

### பலதார மணம்

நம் நாட்டில் மனைவி இறந்த பிறகு (அல்லது) இருக்கும்போது ஆடவர் பல மனைவியரை மணக்கும் வழக்கம் இருந்துள்ளது. இதைப் பல்தாரமணம் என்பர். 'ஒருவனுக்கு ஒருத்தி' எனச் சட்டம் வரையறுக்கப் படினும் நடைமுறையில் இதைக் கொண்டுவர முடியாதநிலையே இன்றும் உள்ளது. பாவேந்தர் பலதார மணத்தை விரும்பவில்லை. தம் காவியங் களில் ஆடவன் பல மகளிரை மணப்பதாகக் காட்டவில்லை. மாறாக, புரட்சிக் கவிஞர் பெண் ஒருத்தி பல திருமணங்கள் செய்வதாகக் காட்டியுள்ளார். 'எது பழிப்பு' என்னும் சிறுகதையில் முத்தம்மை என்பவள் மூன்று திருமணம் செய்து கொள்வதாகக் காட்டப்படுகிறது. இப் படைப்பால் புரட்சிக் கவிஞர் கைம்பெண் மறுமணத்தையும் பலதார மணத்தையும் காட்டியுள்ளார். இதைப் பெண்ணுரிமையின் விளைவாக அவர் காட்டியுள்ளார்.

### புரட்சித் திருமணம்

புரட்சித் திருமணம் என்பது பகுத்தறிவுத் திருமணம் - சீர்திருத்தத் திருமணம் - தமிழர் திருமணம் எனப் பல பெயர்களால் வழங்கப் படுகிறது. வைதிகத்தின் எதிர்ப்பாளராகிய பகுத்தறிவுத் தந்தை பெரியார், அன்பினால் வாழ்த்துதல் இல்லாமல் வெறும் சடங்காக மட்டும் செய்யப் படுகிற மத வழிபாட்டுத் திருமணத்தை வெறுத்தார். இத்திருமணங்கள் மணமக்களின் அன்புள்ளங்களை நினைத்துப் பார்க்காமல் அவர்களின் இசைவைப் பெறாமல் பெரியவர்கள் நடத்தி வைக்கும் பொம்மைக் கல்யாணமாக இருந்தது. மணமக்களின் மனப் பொருத்தம் பாராமல் சோதிடப் பொருத்தம் பார்த்து நடத்தும் திருமணமாக அந்த நிகழ்வு இருந்தது. அந்தப் பொருத்தம் பார்த்து நடத்தும் காலத்தில்தான் பல இளம்பெண்கள் கைம்பெண்கள் (விதவைகள்) ஆயினர்.

பகுத்தறிவுத் திருமணத்தில் ஈடுபாடு கொண்ட பாவேந்தர் பாரதிதாசன் பல திருமணங்களுக்குத் தலைமை தாங்கி நடத்தி வைத்தார்.

தம் பாடல்கள் மூலமும் மக்களுக்குக் கருத்துகளை அறிவித்தார். புரட்சித் திருமணத்தில் கூறப்பட்ட விதிமுறைகளைத் தம் கதைப் பாடலில் நடை முறைப்படுத்திக் காட்டினார். திருமணத்தைப் பற்றி அறிமுகப்படுத்தும் நிலையில் சில விதிமுறைகளைக் கடைப்பிடித்தார்.

சோதிடப் பொருத்தம் பார்த்து நடத்தி வைக்கும் மதம் சார்ந்த திருமணத்தில் மண மக்களின் உள்ளப் பொருத்தத்திற்கு இடமில்லை. மந்திரத்திற்கு முதலிடம் தரப்படுகிறது. இதை 'அகத்தியன் விட்ட புதுக்கரடி' என்னும் பாடலில் புரட்சிக் கவிஞர் இவ்வாறு அறிவுறுத்துகிறார்.

*"மணமுறை மிகுதியும் மாறுதல் வேண்டும்*
*ஒருத்தியும் ஒருவனும் உள்ளம் ஒப்பினால்*
*மணம் எனக் கூறுதல் வாய்மையென்று*
*இயலுதல் வேண்டும்......"* *(பா.கவி. 3. ப. 113)*

என்று காட்டியுள்ளார். உளம் ஒத்த காதல் திருமணம் தமிழருடையது. இந்து மத ஆரியர் மணம் மந்திரத்திற்கு முதல் இடம் தருவது. அது காதல் உள்ளத்திற்கு முதலிடம் தருவதில்லை.

**மாமியார் – மருமகள் ஒற்றுமை**

பல குடும்பங்களில் மாமியாரின் ஆதிக்கக் கொடுமைகளை அனுபவிக்கும் மருமகள்கள் உள்ளனர். சில குடும்பங்களில் மருமகள் களின் கொடுமைகளை அனுபவிக்கும் மாமியார்களும் உள்ளனர். மாமியாரும் மாமனாரும், மருமகளிடம் அன்பாயிருக்கும் காட்சியை இலக்கியங்கள் காட்டுவதில்லை. 'குடும்ப விளக்கு' என்னும் காவியத்தில் இத்தகைய அருமையான காட்சிகளைப் புரட்சிக் கவிஞர் காட்டியுள்ளார். மாமனார் மாமியார் வரும்போது முகம் கூம்புகின்ற மருமகள்களே உள்ளனர். குடும்ப விளக்கின் தலைவியாம் தங்கமோ, அவர்கள் வந்ததும் உளம் மகிழ்ந்தாள். வாழ்த்தி நல்வரவு சொல்லி வணக்கத்தைக் கூறினாள். (கு.வி.ப. 12)

*"இளையவர் மாமன் மாமி*
*நன்குஇரங் கிடுதல் வேண்டும்*
*நானவர்க் கன்னை போல்வேன்*
*எனதத்தான் தனையும்பெற்று*
*வாழ்ந்தநாள் எண்ணும் போதில்*
*தனிக்கடன் உடையேன், நானோர்*
*தவழ்பிள்ளை அவர்கட் கென்றாள்"* *(கு.வி.ப.17)*

என்று தன்னை மகளாக நினைத்துக் கொள்ளும் மருமகளைக் காட்டியுள்ளார். இவ்வாறு மாமியார் மருமகள்களின் உறவிலும் புதுமை காட்டியுள்ளார்.

### கற்பு பற்றிப் பாரதிதாசனின் புதுமைக் கருத்துகள்

ஒரு பெண் தன் கற்பு நெறியை அழிக்க வருபவனைக் கொலை செய்தாலும் தவறில்லை. அவளைக் குற்றவாளியாக - கொலைக்காரியாக நினைக்கக் கூடாது என்று காந்தியடிகள் கூறியுள்ளார். அதுபோல் பாவேந்தர் பாரதிதாசனும் "மகளிர் தம் கற்பைக் காக்க ஆடவனை நம்பக் கூடாது. தம்மைக் காத்துக் கொள்ள இடையில் கத்தி ஒன்று வைத்திருக்க வேண்டும்" எனக் கூறுகிறார். இதனைத் 'தமிழச்சியின் கத்தி'யில் தன் கற்பு சுதர்சனன் என்பவனால் அழியக் கூடும் என்று அஞ்சி முன்னெச்சரிக்கையுடன் கத்தி வாங்கிக் கொண்டதாகப் பாடியுள்ளதன் மூலம் அறியலாம்.

### குழந்தை வளர்ப்பில் புதுமைக் கருத்துகள்

சோவியத் நாட்டில் குழந்தைகள் பிறந்தவுடன் பொதுக்காப்பகங்களுக்கு அனுப்பப்பட்டுச் சிறந்த முறையில் வளர்க்கப்பட்டவுடன் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படுவர். இவ்வமைப்பு முறையைப் பெரிதும் விரும்பிய பாவேந்தர்,

*"தெருத்தொறும் தெருத்தொறும் பெருத்த வீடு*
*மருத்துவர், மருந்து, திருத்தச் செவிலியர்*
*கட்டில்கள், தொட்டில்கள், கணக்கர் அமைக்க!*
*தெருத்தொறும் கருப்பெற்ற சேயிழை மாரைக்*
*கருத்தொடு நாடொறும் கண்காணிக்க!*
*குழந்தை பெறும் நாள் குறுகிடில் அவரை*
*மருத்துவ வீட்டில் வரவழைக்க*
*பெறும் நோய் இன்றிப் பெறும்வகை செய்க!"* *(ஒ.தா.உ.ம.ப.18)*

என்று பொதுக் காப்பகங்கள் இயங்க வேண்டிய முறையைப் பற்றி விளக்கியுள்ளார். வயது இரண்டான பின் குழந்தைகளை அரசு நிறுவியுள்ள பொதுப்பள்ளிகளுக்குக் கொடுத்துவிட வேண்டும். குழந்தை வளர்ப்பு நிறுவனங்கள் நாடெங்கும் தழைக்க வேண்டும் என்னும் புதுமைக் கருத்தினை நாட்டிற்குத் தம் பாடல் மூலம் அறிவுறுத்தியுள்ளார்.

### முடிவுரை

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் மொழிப் படைப்பு வரையறையால் தமிழ்க் கவிஞர். ஆனால் கருத்தளவையால், கவிதைச் சுவையளவையால், புதுமைப் படைப்புகளால் மொழி எல்லையையும், நாட்டு எல்லையையும், கால எல்லையையும் கடந்த உலகக் கவிஞருள் ஒருவர். பெண்களுக்கான புதுமைக் கருத்துகளை அவருடைய படைப்புகள் முழுவதிலும் காணலாம்.

"பெண்களை அச்சமுடையவர்களாக வளர்க்கக் கூடாது. பெண்களுக்குப் பேச்சுரிமை வேண்டும். மணமகனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை வேண்டும். சொத்துரிமை வேண்டும்" என்றார் பாவேந்தர். "பெண்ணுரிமையைக் காக்கக் கருத்தடை வேண்டும். மணவிலக்கிற்குப் பின் பெண்ணுக்கும் மறுமணம் செய்யும் உரிமை வேண்டும். பெண்மைக்கு உரிமை அளிக்கும் புரட்சித் திருமணங்கள் நாட்டில் பரவ வேண்டும். பெண்ணடிமைச் சின்னமான தாலி அணிதலை நீக்க வேண்டும். மாமியார், மருமகளுக்குள் ஒற்றுமை தழைக்கும் பெண்ணுரிமை நிலவுமாயின் வீடும் சிறக்கும், நாடும் சிறக்கும்!" எனப் புரட்சிக் கவிஞர் கூறியுள்ளார்.

## செந்தமிழ் என்றும் பயில்

*செந்தமிழில் தீஞ்சுவையாய் செம்மாந்த கட்டுரையும்*
*குன்றடைத் தேனாய் இலக்கணமும் ஆய்ந்த*
*கருத்தொழு கும்கனிச் சாறும் பருகிடச்*
*செந்தமிழ் என்றும் பயில்.*

- க.அன்பழகன்
31, பூக்குளம் புதுநகர்,
கரந்தை, தஞ்சாவூர்-2.

# பேரா. க.வெள்ளைவாரணனாரின் தொல்காப்பியப் புறத்திணையியல் உரை நுண்திறன்

முனைவர் **உ.கருப்பதேவன்**
உதவிப்பேராசிரியர்,
ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,
மதுரை - 21.

**முன்னுரை**

தமிழ்மொழி இலக்கண இலக்கிய வளங்களைப் பெற்றிருப்பதைப் போலவே நல்ல உரை நூல்களையும் பெற்றிருக்கிறது. பழம் நற்றமிழ் இல்க்கிய சரக்கறையைத் திறக்கும் திறவுகோலாக விளங்குபவை உரைநூற்களே. இலக்கியங்களோடு ஒத்துவைத்து எண்ணப்படுகின்ற உரை நூல்கள் பல உண்டு. இலக்கியங்களைப் போலவே என்றும் அழியாச் சிறப்புடைய உரைகளைப் படைத்தளித்த உரையாசிரியர் பலர். நுண்மாண் நுழைபுலம் மிக்க அவர் பணி என்றும் போற்றுதற்குரியது. தமிழ் உரைநடையைப் போற்றி வளர்த்தவர்கள் உரைநடையாசிரியர்களே. தமிழ் உரைநடை உரையாசிரியர் காலத்தில் போதாகி, ஐரோப்பியர் வரவால் மலர்ந்து, இன்றைய தேவையை ஒட்டி மணம் வீசத் தொடங்கியிருக்கிறது என்று குறிப்பிடுவதால் உரையாசிரியர்களின் பணி உணரப்படுவதை அறியலாம்.

**உரையின் இலக்கணம்:**

உரையின் பொது இலக்கணத்தை நன்னூலின் பொதுப்பாயிரம் இவ்வாறு கூறுகின்றது: பாடம் கருத்தே சொல்வகை சொற்பொருள் தொகுத்துரை உதாரணம் வினாவிடை விசேடம் விரிவு அதிகாரம் துணிவு பயனோடு ஆசிரிய வசனம் என்று ஈரேழ் உரையே. (பொதுப்பாயிரம்20)

(பொருள்: பாடம் சொல்லலும், கருத்துரைத்தலும், சொல் வகுத்தலும், சொற்பொருள் உரைத்தலும், பொழிப்புரைத்தலும், உதாரணம் காட்டலும், வினாத் தோற்றலும், விடை கொடுத்தலும், விசேடம் காட்டலும் (சூத்திரத்து உட்பொருளன்றி ஆண்டைக்கு வேண்டுவன தந்து உரைத்தல்), விரிவு காட்டலும் (வேற்றுமை முதலிய தொக்கு நிற்பன வற்றை விரிக்க வேண்டியதிருந்தால் விரித்து உரைத்தல்), அதிகார வரவு காட்டலும் (அவ்வதிகாரத்தோடு பொருந்த உரைக்க வேண்டும் வகையில் உரைத்தல்), துணிவு கூறலும் (ஐயுறக் கிடந்தவழி இதற்கு இதுவே பொருள் என உரைத்தல்), பயனொடு படுத்தலும், ஆசிரிய வசனம் காட்டலும் என்னும் இப்பதினான்கு பகுதியானும் உரைக்கப்படும் சூத்திரப் பொருள்.

**உரை வகைகள்:**

உரைகளைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்துவர்.

**பதவுரைகள்:**

சொற்கள், தொடர்கள் அனைத்திற்கும் ஒன்று விடாமல் தனித்தனியே பொருள் கொள்ளுமாறு அமையும்.

**பொழிப்புரைகள்:**

சொல்லுக்குச் சொல், தொடருக்குத் தொடர் பொருள் கண்டு, அப்பொருள்கள் கூடியோ, குறைந்தோ, சிதையாமல் அவற்றை ஒருங்கிணைத்துப் பொருள் கொள்வது.

**விரிவுரைகள்:**

பதவுரை, பொழிப்புரை என இவற்றுள் ஒன்றோ அல்லது இரண்டுமோ அமைந்து அந்தப் பொருள் பற்றிப் பல நோக்கிலான விளக்கங்களும் அமையும்.

**விளக்கவுரைகள்:**

வரலாற்று நிகழ்வுகள், புராணக்கதைகள், சமயத்தத்துவங்கள், நடைமுறை நிகழ்வுகள் போல்வன தந்து, அல்லது அவற்றின் அடிப்படையில் பொருளை விளக்குவதாக அமையும்.

**கருத்துரைகள்:**

சொல்லுக்குச் சொல், தொடருக்குத் தொடர் பொருள் சொல்லுதல் என்று இல்லாமல், பாடலின் திரண்ட கருத்தைச் சொல்லும் வகையில் அமையும். *ஒரு வரி உரைகள்: சொல்லுக்குச் சொல், தொடருக்குத்* தொடர் பொருள் காணுதல் என்று இல்லாமல், செய்யுளின் திரண்ட கருத்துரைகள் கண்டு அவற்றை மேலும் சுருக்கி ஒரு வரியில் உரைகாணும் முயற்சி.

நூலுக்கு உரை காணுதல் என்பதோடு, தேவை கருதி, உரைக்கும் விளக்க உரை காண வேண்டிய சூழல்கள் உருவாக்கம் பெற்றுள்ளது. அவை உரை விளக்க உரைகள் எனப்படும்.

ஒரு செய்யுள் நூலுக்கு உரைநடையில் கூறுவதோடு செய்யுள் உருவத்திலேயே உரை இயற்றுதலும் உண்டு.

உரைத் திறனாய்வாளர்கள் நல்லுரை, கவியுரை, தற்சார்புரை, மிகையுரை, குறையுரை, பொருந்தா உரை என்று வகை கண்டு ஆய்வு செய்வர்.

நூலாசிரியரே உரை எழுதிவிட்டால் உரை வேற்றுமை எழ வாய்ப்பில்லையே என்ற எண்ணம் எழுகிறது. மூல ஆசிரியரே உரையையும் எழுதிவிடும் வழக்கமும் உண்டு. வடமொழி நூல்களில் இவ்வாறு ஆசிரியரே உரை எழுதும் முறை பெரிதும் உள்ளது. நூலாசிரியரே தம் கருத்தைத் தாமே இது என்று திட்டவட்டமாக விளக்கி

விடுகின்றார். பின் வருவோர் தம் கருத்தை மாறுபடக்கொள்வாரோ, தாம் கூறியுள்ள அரிய கருத்து விளங்காமல் போய்விடுமோ என்று நூலாசிரியர் அஞ்சியதாலேயே இவ்வாறு உரை எழுதியிருக்கலாம்.

ஆகையால் நூலாசிரியரே உரை எழுதிவிட்டால், மற்றோர் உரை தோன்ற வாய்ப்பு இல்லை. நூலைப் படிப்பவர்களுக்கு வேறுவகையான விளக்கமோ, கருத்தோ தோன்றினாலும் அவற்றைக் கொள்ளத் தடையாக இருக்கும். ஆனால் காலந்தோறும் தோன்றும் புதிய கருத்திற்கு அந்நூலில் இடமிருக்காது.

நூலின் சிறப்பு, பாடலின் நயம், கருத்தழகு ஆகியவற்றை நூலாசிரியரே வியந்து, தம் உரையில் பாராட்டிக் கொள்வது சிறப்பாக இருக்காது. தம் புலமை மாண்பைத் தாமே பாராட்டிக்கூறும் ஆசிரியரை உலகம் எள்ளி நோக்கும் நிலை வரும். இவற்றை எல்லாம் பார்க்கும் போது, நூலாசிரியரே உரை எழுதுவதால் பயன் மிகுதியாக இல்லை என்றே தோன்றுகிறது.

**உரையின் தேவை:**

இலக்கணமும் இலக்கியமும் சுருங்கிய சூத்திர வடிவில் அமைந்திருப்பதால், அவற்றின் பொருளை அறிந்துகொள்ள உரைகள் தேவையாகின்றன. இலக்கிய நூல்கள் சிலவற்றை உரைகளின் உதவி இல்லாமல் அறிவது கடினம். மேலும் மொழி வளர்ச்சியின்போது சொல் மாற்றங்களும் பொருள் மாற்றங்களும் நிகழ்கின்றன. காலம் செல்லச் செல்ல முந்தைய காலத்தில் வழங்கிய சொல்லின் பொருளை இன்னொரு காலத்தில் புரிந்து கொள்வது கடினமாகிப் போகிறது. கடினம் என்பது காலத்துக்கேற்பவும் அவரவர் தகுதிக்கு ஏற்பவும் அமையும். படிப்பவர்களுக்கு எளிதாகப் புரியும் வண்ணம் உரை காண முயன்ற ஆசிரியர்கள் பயன்பாடுடைய நூல்களை, பயன்படத்தக்க வகையில் எளிய முறையில் புரிந்து கொள்ளும் நோக்கில் உரை அமைத்தனர்.

**உரைநூல்களின் காலம்:**

மொழிகள் காலப்போக்கில் மாற்றம் அடைகின்றன. பழைய சொற்கள் வழக்கிழப்பதும் புதிய சொற்கள் தோன்றுவதும் இயல்பு. இவற்றைவிட இலக்கண மாற்றங்களும் புதிய சொற்கள் தோன்றுவதும் இயல்பு. இவற்றைவிட இலக்கண மாற்றங்களும் எற்படுவதுண்டு. இதனால் ஒரு காலத்தில் ஆக்கப்பட்ட நூல்களைப் பல நூற்றாண்டு களுக்குப் பின் வருவோர் புரிந்து கொள்ள முடியாமல் போய்விடுகிறது. இது மட்டுமின்றிக் குறிப்பிட்ட ஒரு காலத்தில் நூல்களை ஆக்குவதற்குப் பயன்பட்ட இலக்கிய வடிவம் பரவலாகப் புரிந்து கொள்வதற்கு ஏற்றதாக இல்லாமலும் போகக் கூடும்.

இந்த அடிப்படையில் சுமார் 2000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமை கொண்ட இலக்கியத்தைக் கொண்ட தமிழும் இதற்கு விதி விலக்கு அல்ல. சங்க காலத்திலும், அதன் பின்னர்ச் சங்கம் மருவிய காலத்திலும் எழுதப்பட்ட நூல்கள் மொழியில் ஏற்பட்ட மாறுதல்களால் புரிந்து கொள்ளப்படாமல் போனது ஒருபுறம் இருக்கப் பா வடிவில் சுருக்கமாகச் சொல்லப்பட்ட செய்திகளை விரிவாக விளக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டதனால் பிற்காலங்களில் இவற்றுக்குப் பல உரை நூல்கள் எழுந்தன.

இதனால் காலத்துக்குக் காலம் இத்தகைய நூல்களுக்கு மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் உரைகள் எழுதப்படுவதும், மேலும் காலம் செல்லச் செல்ல அந்த உரைகளே புரிந்து கொள்ளப்படாது போகப் புதிய உரைகள் எழுதப்படுவது வழக்கமாக நிகழ்வதே. கி.பி. 9ஆம் நூற்றாண்டு முதல் 13 ஆம் நூற்றாண்டு வரையுற்ற காலம் உரைகள் மேலோங்கிய காலம் எனலாம். இவ்வாறு வளர்ந்த இவ்வுரைகள் எழுதிய உரையாசிரி யர்களின் காலம் கி.பி.12 முதல் 18 ஆம் நூற்றாண்டு எனக் கூறப்படுகிறது.

**உரையாசிரியர்களின் சிறப்பியல்புகள்:**

தமிழ் மொழி இலக்கிய வளம் மிகுந்தது; இலக்கிய வரம்புடன் காலந்தோறும் வளர்ந்து வரும் இயல்புடையது. இலக்கண இலக்கியச் சிறப்புக்களேயன்றி அவற்றிற்குச் சிறந்த உரைநடைகளையும் பெற்றிருக்கிறது. தமிழ் நலம் வளரத் தொண்டு புரியும் புலமைச் செல்வர்களை நூலாசிரியர், உரையாசிரியர், போதகாசிரியர் என மூவகையினராகப் பகுப்பர் சான்றோர். இம் முத்திறத்தாருள் நூலாசிரியரது மனக் குறிப்பினை உய்த்துணர்ந்து போதகாசிரியர்க்குத் தெளிய அறிவிக்கும் நுண்ணுணர்வும் சொல்வளமும் ஒரு சேரப் பெற்றவர்கள் உரையாசிரியர் களேயாவர். தொல்காப்பியர், திருவள்ளுவர், இளங்கோவடிகள் முதலிய பெரும் புலவர்கள் இயற்றிய சிறந்த நூல்களைப் போலவே, அவற்றின் பொருள் நலங்களை இனிது விளக்கும் நோக்கத்துடன் இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர் அடியார்க்கு நல்லார் முதலிய பெருமக்கள் இயற்றிய உரைகளும் சிறப்புடையனவாக அறிஞர்களால் பாராட்டிப் பயிலப்பெற்று வருகின்றன.

தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கந்தரும் முறையில் அமைந்த இவ்வுரைகளை இயற்றி உதவிய புலமைச் செல்வர்களாகிய உரையாசிரி யர்களின் வரலாறுகளும் அன்னோரது மதிநுட்பமும் ஆராய்ச்சி வன்மையும் உலகியலறிவும், பல்கலைப்புலமையும், அவர்கள் வாழ்ந்த காலச் சூழ்நிலைகளையும் அறியமுடிகின்றது.

உரையாசிரியர்கள் தமிழ் மொழிக்குச் செய்துள்ள தொண்டு

மலையிலும் மிகமிகப்பெரிது. தமிழகம் வேற்று இனத்தவர் படையெடுப்பால் தாக்குண்டு நிலை குலைந்து, தமிழ் மக்கள் தம் பண்பாட்டை மறந்தபோதெல்லாம் பழம் பெரும் இலக்கியச் செல்வங்களை எடுத்துக் காட்டி விளக்கித் தமிழ் மரபை வாழச் செய்த பெருமை உரையாசிரியர்களுக்கு உண்டு. வேற்றுநாட்டு மொழியும் நாகரிகமும் தமிழ் மண்ணில் புகுந்து கால்கொண்டு தமிழ்ப் பண்பை மறக்கச் செய்த போதெல்லாம் உரையாசிரியர்கள் தமிழ்ப் பண்பை நினைவூட்டி, தமிழ்மக்களைத் தடுத்து ஆட்கொண்டனர். தமிழ்மொழியின் காலம் கடந்த மாண்பிற்கும் வெற்றிக்கும் காரணமாய் இருப்பவர்கள் உரையாசிரியர்களே ஆவர். இலக்கணக் கொள்கைகளை விளக்கி மொழியை வரம்புகாட்டிக் காத்தும், இலக்கியக் கருத்துக்களை விளக்கிக் காலந்தோறும் பண்பாட்டை வளர்த்தும் தமிழினத்திற்குத் தொண்டுசெய்த பெருமை உரையாசிரியர்களையே சாரும்.

டாக்டர் வ.சுப.மாணிக்கம் அவர்கள், "உரைவகை ஒரு முயற்சி; சார்பிலக்கண நூல் வகை ஒரு முயற்சி; இலக்கிய வகை ஒரு முயற்சி; இம்மூவகை முயற்சியாலும், தொன்னூல்கள் இடைக்காலத்துப் பரவின; படிக்கப் பெற்றன" என்று உரையாசிரியர்களின் தமிழ்த்தொண்டை நினைவுபடுத்தியுள்ளார்.

பழம்பெரும் நூல்கள், உரையாசிரியர்களின் உதவியின்றேல் நமக்கு இன்று விளங்காமல் போயிருக்கலாம். இலக்கியச் சுவை வெளிப்படாமல் போயிருக்கும்; ஆழ்ந்த விழுமிய பொருள் தோன்றாமல் மங்கி இருக்கும். இவ்வுண்மையை நன்கு அறிந்த பண்டிதமணி மு.கதிரேசஞ்செட்டியார் அவர்கள் நூலாசிரியரின் அரிய கருத்துக்களை எல்லாம் உரையாளர் உதவியாலேயே உலகம் உணர்ந்து இன்புறுகின்றது. பேருபகாரிகளாகிய உரையாசிரியர்களின் உதவி இல்லையாயின் பண்டை உயர் நூல்களாம் கருவூலங்களில் தொகுத்து வைத்த விலை வரம்பில்லாப் பொருள் மணிக்குவியல்களை யாம் எங்ஙனம் பெறுதல் கூடும்? என்று உரைக்கின்றார்கள்.

உரையாசிரியர்களை,

*"மதி, நுட்பம் நூலொடு உடையவர்"*

என்றும்,

*"பல் கேள்வித் துறை போகிய*
*தொல்லாணை நல்லாசிரியர்"*

என்றும் பாராட்டுதல் தகும். அவர்கள் நுண்மாண் நுழைபுலம் உடையவர்கள்; ஆழ்ந்திருக்கும் கவியுளம் காணவல்லவர்கள். அவர்களின் பண்பட்ட உள்ளம், அறிவுத்திறன், கல்விமாண்பு, விருப்புவெறுப்பு அற்ற தன்மை ஆகியவற்றை நோக்கும்போது,

"…. இகலோடு

*செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்*
*கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்*
*தாம்வரம்பு ஆகிய தலைமையர் காமமோடு*
*கடுஞ்சினம் கடிந்த காட்சியர்"*

என்று அவர்களைப் போற்றத்தகும் என்று வித்துவான் மு.வை.அரவிந்தன் அவர்கள் பாராட்டுகிறார்கள்.

நூலாசிரியர்களின் ஆற்றலை நன்கு உணர்ந்தவர்கள் உரையாசிரியர்களே. மிகவிரைவாக ஓடிச் செல்லும் ஒரு பேரியாற்றை எதிர்த்து நீந்தி அந்நீரோட்டத்தின் வன்மையை இற்றென உணர முற்படுவோர்போல, தாம் உரை எழுத மேற்கொண்ட சான்றோர் செய்யுட்களில் உள்ள சொற்களின் செலவை எதிர்த்து ஆராய்ந்து உண்மைப் பொருள் கண்டு உலகிற்கு உதவியவர்கள் உரையாசிரியர்களேயாவர்.

உரையாசிரியர்கள் பல நூல்களைக் கற்றுத் தெளிந்த பின்னர் ஏதேனும் ஒரு நூலைத் தமக்கு உரியதாகத் தேர்ந்து எடுத்துக்கொண்டு, அந்நூலில் மூழ்கினர்; வாழ்நாள் முழுதும் அதில் தோய்ந்து தம் புலமைத்திறன் முழுதும் காட்டி அந்நூலுக்கு உரை கண்டனர். ஒன்றே செய்து அதனையும் நன்றே செய்து இறவாப் புகழ்பெற்றனர்; மொழி உள்ளளவும் தம் பெயரை நிலைநாட்டிச் சென்றனர்.

நூலாசிரியரின் உள்ளக்கருத்தினை நுணுகி ஆராய்ந்து தெளிவுபெற எடுத்து முழுதும் வன்மையராய் உரையாசிரியர் விளங்கினர். யார் யார் எவ்வெத் துறை நூல்களில் மிகுதியான பயிற்சி பெற்றிருந்தனரோ அவரவர் அவ்வத்துறை நூல்களுக்கு உரை எழுதினர். இவர்கள் நன்கு சிந்தித்துப் பிறர்க்கு உரைத்து, தவறுகளை ஆராய்ந்து நீக்கி உரை எழுதினர். நூலாசிரியரின் உள்ளக்கருத்தை நன்கு அறிந்து கொள்ளப் பல நூல்களைப் பல நாட்கள் இடைவிடாது கற்றுத்தெரிந்து உரை கண்டனர். நூலறிவோடு உலகியலறிவும் பெற்றனர்; நூல் வழக்கோடு பேச்சு வழக்கையும் அறிந்தனர்; பல்வேறு சமயங்களையும் கலைகளையும் கற்றுத் தெளிந்தனர்.

உரையாசிரியர்கள் பழைய நூல்களுக்கு உரை எழுதியதோடு நின்றுவிடாமல், பழைய நூல்களில் பிற்காலத்தவர் எழுதிச் சேர்த்த இடைச்செருகல்களையும், போலி உரைகளையும் பொருந்தா உரைகளையும் நீக்கிப் பொருத்தமான உரைகண்டனர்.

**உரையாசிரியர்கள் கையாண்ட உத்திகள்**

உரையாசிரியர்கள் வெறும் சொற்பொருள் விளக்கம் தருவதோடு நின்று விடாமல் இலக்கணக் குறிப்புத் தருதல், எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குதல், திறனாய்வு முறையில் விளக்குதல், வினாவிடை முறையில்

விளக்குதல், எதனையும் வரிசை முறைப்படியும் ஒழுங்கு முறையிலும் எழுதுதல் என்று பல்வேறு உத்திகளைக் கையாண்டு விளக்கம் செய்வர். இவ்வுரையாசிரியர்களின் நடை 'விளக்க நடை' என்று கூறப்படுகின்றது. சிலபொழுதுகளில் மூல நூலை விட உரைநூல் சிறப்பாக அமைவதும் உண்டு.

தோன்றிய காலத்தில் புகழுடன் விளங்கிய சில நூல்கள், காலப் போக்கில் ஏற்பட்ட அரசியல் சூழல், சமூகச் சிந்தனை மாற்றம், சமயக் கோட்பாடுகளின் தாக்கம் ஆகியவற்றால் செல்வாக்கு இழந்தன. இலக்கிய மரபும் இலக்கணக் கோட்பாடும் மாறியதால் சில நூல்கள் தமக்குரிய இடத்தை இழந்து பின்தங்கின. தமிழ் மொழியில் பழையன கழிந்து புதியன புகுந்து, பழஞ்சொற்களின் பொருள் மாறியதால் சில நூல்கள் புரியாத நிலையை அடைந்தன. அயல் நாகரிகத்தை ஏற்றுக் கொண்ட மக்களின் புதுமை நாட்டத்தால் சில நூல்கள் அழிந்தன. இவ்வாறு தமிழ் நூல்களுக்கு அவ்வப்போது ஏற்பட்டு வந்துள்ள தடை, எதிர்ப்பு, புறக்கணிப்பு ஆகியவற்றை அகற்றி அவை இழந்துவிட்ட செல்வாக்கை மீட்டுத் தர உரையாசிரியர்கள் பெருமுயற்சி செய்தனர். இலக்கணக் கொள்கைகளை விளக்கி மொழியை வரம்புகட்டிக் காத்தும், இலக்கியக் கருத்துக்களை விளக்கிக் காலந்தோறும் பண்பாட்டை வளர்த்தும் தமிழ் மரபிற்குத் தொண்டு செய்ததில் உரையாசிரியர்களின் பங்கு நிறைய உண்டு எனலாம்.

ஒரு நூலின் கருத்தையோ பாட்டின் பொருளையோ காண்பதற்குப் பல அறிவுக்கூறுகள் வேண்டும். உரையாசிரியர்கள் மொழியியல், அறிவியல், உளவியல், சமூகவியல், வரலாற்றியல், சட்டவியல், நாட்டுப்புறவியல் எனப் பல்துறை அறிவுக்கூறுகளை உடையவர்களாகக் காணப்படு கின்றனர். திறனாய்வின் கூறுகளும் பண்டைய உரையாசிரியர்களின் உரைகளில் காண்கிறோம். இது இன்ன காலத்துத் தோன்றிய நூல் என்ற கால அறிவும், இக்காலத்து இச் சொல்லுக்கு இப்பொருள் என்ற சொல்லறிவும், இன்ன காலத்து இருந்த பழக்க வழக்கங்கள் இவை என்ற சமுதாய அறிவும், இத்தொடர் ஓடிக்கிடக்கும் முறை இது என்ற நடையறிவும் இருந்தால்தான் பொருளை முரணின்றிக் காணமுடியும். உரையாசிரியர்களின் பணி பழைய நூல்களுக்கு உரை கண்டதோடு நின்றுவிடவில்லை. அவர்கள் பழைய நூல்களில் பிற்காலத்தவர் எழுதிச் சேர்த்த/திருத்திய பொருந்தாப் பாடல்களை/ இடைச் செறுகல்களை ஆராய்ந்து நீக்கினர். ஏடு எழுதியவரால் நேர்ந்த பிழைகளையும் களைந்தனர். உரையாசிரியர்களின் துணை இல்லாவிடின் பழம்பெரும் நூல்களில் பொதிந்து கிடக்கும் கருத்து வளங்களை நாம் பெற முடியாமலேயே போய் இருக்கும்.

**தொல்காப்பியப் பொருளதிகார அமைப்பு**

எழுத்து, சொல் பற்றி உரைத்த ஆசிரியர் தொல்காப்பியனார் சொற்றொடர் கருவியாக அறியப்படும் பொருளைப்பற்றி உரைப்பதுவே நூலின் மூன்றாம் பகுதியாகும் என்பர். (கு.சுந்தரமூர்த்தி (பதி.). தொல்காப்பியம், பொருளதிகாரம். நச்சினார்க்கினியர் உரை. ப.14) இதனை வெள்ளைவாரணனார் பொருள்நெறி மரபு என்பார். (க.வெள்ளைவாரணனார், தமிழிலக்கிய வரலாறு - தொல்காப்பியம் பகுதி இரண்டு, ப.76.)

பொருள் என்ற பெயர் மிகவும் பொருட்செறிவு மிக்கது. எழுத்தும் சொல்லும் அறிந்தார் இலக்கியமும் தெளிதல் வேண்டும் என்ற நோக்கில் பொருள் என்ற பெயரால் இலக்கிய இலக்கணம் உரைத்தார். இலக்கியத்தின் பொருள் வாழ்வு; வாழ்வின் பொருள் இலக்கியம் இவ்விரண்டு பற்றியும் உரைப்பதே பொருட்படலம் எனக் கூறுவர். (சி.இலக்குவனார், தொல்காப்பிய ஆராய்ச்சி, ப.124).

இலக்கியத்தின் குறிக்கோளை இயம்புதலே பொருட்படலத்தின் நோக்கமாகும் என்றும் உரைப்பர். (சி.இலக்குவனார், தொல்காப்பிய ஆராய்ச்சி, ப.125).

பொருள் என்பதற்கு நச்சினார்க்கினியர். அறம், பொருள், இன்பம் அவற்றது நிலையின்மை, வீடுபேறு எனவும் அவற்றின் பகுதியாகிய முதல், கரு, உரியும் காட்சிப் பொருளும், கருத்துப் பொருளும் அவற்றின் பகுதியாகிய ஐம்பெரும் பூதமும், அவற்றின் பகுதியாகிய இயங்கு திணையும் நிலைத் திணையும் பிறவும் பொருளாம் என்பர். ( கு.சுந்தர மூர்த்தி, (பதி.), தொல்.பொருள்.நச்சினார்க்கினியர் உரை, ப.14.) இதனையே ஏற்று மொழிவர் வெள்ளைவாரணனார். (க.வெள்ளை வாரணன், தமிழிலக்கிய வரலாறு தொல்காப்பியம், ப.77)

**வெள்ளைவாரணனாரின் நுண் திறன் உரை**

புறத்திணையில் உள்ள வெட்சி முதலாக வாகை ஈறாக அரசியல் கூறிக் காஞ்சியுள் நிலையாமை கூறவே அறனும் பொருளும் அவற்றது நிலையின்மையும் கூறினார்.

“அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்” என்பதில் இல்லறமும் துறவறமும் கூறினார். நிலையாமையானும் பிறவற்றானும் வீட்டிற்குக் காரணம் கூறினார் எனவும் கூறுவர் நச்சினார்க்கினியர். (க.வெள்ளை வாரணன், தமிழிலக்கிய வரலாறு - தொல்காப்பியம், ப.78)

பொதுவாகப் பொருளதிகாரம் முழுமையும் இலக்கிய ஆய்வாகவே அமைந்துள்ளது. இலக்கிய ஆய்வில் ஈடுபடும் யாரும் இலக்கியத்திலுள்ள பாடுபொருள், இலக்கிய வடிவம். விளிம்பு முறை ஆகியவற்றைப்

புறக்கணிக்க இயலாது. பாடுபொருள்களையும் இலக்கண அறிஞர்கள் அகம், புறம் என இரண்டாகப் பிரித்துள்ளனர். இலக்கிய வடிவம் ஆராயப் படும் பொழுதே யாப்புப் பற்றியும் பேசவேண்டிய தேவை ஏற்படுகிறது. உவமை உருவம் போன்றவை எல்லாம் விளிம்பு முறை பற்றிய ஆய்வில் அடங்கும். தொல்காப்பியப் பொருளதிகாரத்தை அக்கால அறிஞர்களின் கருத்துப்படி அமைந்த "இலக்கியக் கோட்பாடு" என்று சொன்னால் தவறில்லை என்பர். (டாக்டர் பொற்கோ, தமிழிலக்கணக் கோட்பாடுகள், ப.3)

இன்பப் பகுதியினைக் கைக்கிளை முதலாகப் பெருந்திணை ஈறாக வகுத்து அகப்பொருள் இலக்கணம் உரைத்தார். புறப் பொருட் பகுதியாகிய வெட்சி முதல் பாடாண் திணை ஈறாகப் புறப்பொருள் இலக்கணம் உரைத்தார். அகப்பொருட் பகுதியாகிய களவு, கற்பு என்னும் ஒழுகலாறுகளை விரித்துக் கூறினார். அகமும் புறமும் பற்றி வரும் பொருளியல்பு உணர்த்தினார். அவ்விரு பொருள்களின் குறிப்புப் பற்றி உவமிக்கப்படும் உவமையின் இயல்புரைத்தார். எல்லாப் பொருட்கும் இடமாகிய செய்யுட்களின் இலக்கணத்தை விரித்துரைத்தார். அவற்றின் பின் வழக்கிலக்கணமாகிய மரபிலக்கணம் உரைத்தார். இவ்வாறான பகுப்பில் ஒன்பது இயல்களை உடையதாயிற்று எனவும் கூறுவர் வெள்ளைவாரணனார். (க.வெள்ளைவாரணன், தமிழிலக்கிய வரலாறு- தொல்காப்பியம், பகுதி இரண்டு, ப.78)

திணை இரண்டு, அவை பதினான்கு கூறுகளாக அமைந்துள்ளன. செய்யுள்வகை ஆறு, நிலங்கள் நான்கு, பொழுது பன்னிரண்டு, வழுக்கள் பதினான்கு, இருவகை வழக்கும் இடம் இரண்டும் எனப் பொருளதிகாரம் அமைந்துள்ள முறைமையை நச்சினார்க்கினியர் வகுத்துரைத்தார். அவரே மேலும் ஒரு பகுப்பினைச் சுட்டிச் சென்றுள்ளார். அப்பகுப்பு முதல், கரு, உரியும் திணைதொறும்மரீஇய பெயரும் திணைநிலைப் பெயர், கைகோள் இரண்டு, கூற்றுப் பன்னிரண்டு, கேட்போர் பத்து, மெய்ப்பாடு எட்டு, உவமம் நான்கு, மரபு ஐந்து என்பதாகும். இதனையும் விடாது வெள்ளைவாரணனார் எடுத்துக்காட்டியுள்ள திறம் அவர்தம் நூற்பாக இலக்கணப் பயிற்சியை நினைவூட்டுவதாகும்.

இலக்கணத்தைத் தெளிவு செய்யும் நோக்கில் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களிலும் அமைந்துள்ள திரண்ட கருத்துக்களை எளிமையாகத் தந்துள்ளார். ஒவ்வோர் அதிகாரத்திலும் அமைந்துள்ள இயல் கருத்துக்களைச் சுருக்கி விளக்கியுள்ளார். இயலின் பெயர்க்காரணம், உரையாசிரியர்களின் மாறுபட்ட கருத்துக்கள் போன்றவற்றை மொழிந்து வெள்ளைவாரணனார் தம் கருத்தினையும்

உடன் கூறியுள்ளார்.

**சொற்பொருள் ஆய்வு**

நூற்பாக்களுக்கு எடுத்துக்காட்டு உரைக்குங்கால் சில சொற்களுக்கு உரிய காரணங்களையும் வெள்ளைவாரணனார் விளக்கிச் சென்றுள்ளார். ஆண் மகன் - ஆளும் மகன் எனவும் பெண் மகள் பெண்ணாகிய மகள் எனவும், பெண்டாட்டி - பெண்மையை ஆளுகின்றவள் எனவும் சொற் பொருள்களை விரித்து உணர்த்துகின்ற போக்கினைக் காணலாம். (க.வெள்ளைவாரணன், தொல்.நன்.சொல்.ப.190)

தேவைப்படும் இடங்களில் மட்டுமே இவ்வாறு விளக்கங்களை வெள்ளைவாரணனார் தந்துள்ளார் என்பதும் கருதத்தக்கது.

**புதிய நோக்கும் போக்கும்**

வஞ்சித் திணை என்பது புறத்திணை இயல்களில் ஒன்று. வஞ்சி என்பது முல்லைக்குப் புறமாக அமைக்கப்படுவது. இதன் ஒழுக்கம்,

**“எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்**
**அஞ்சுதகத்தலைச் சென்றடல் குறித்தன்றே”**

எனத் தொல்காப்பியர் கூறியுள்ளார். இந்நூற்பாவிற்கு உரை எழுதுங்கால் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் கருத்து வேறுபட்டுள்ளனர். எப்பொழுதும் மண்ணாசை கொண்டுள்ள வேந்தன் ஒருவனை மற்றொரு வேந்தன் அஞ்சுமாறு சென்று போர் செய்வது என்பது இதன் உரையாக இளம்பூரணரால் குறிக்கப் பெற்றுள்ளது. (க.வெள்ளைவாரணனார், “தொல்காப்பியப் பொருளதிகார ஆய்வு” நாவலர் சோமசுந்தர பாரதியார் நினைவுச் சொற்பொழிவு, ப.13)

படையெடுத்துச் செல்கின்ற வேந்தனும் அவனை எதிர்கொள்கின்ற வேந்தனும் மண்வேட்கை உடையவர்கள் எனவும் இருவரும் வஞ்சி வேந்தர்கள் எனவும் நச்சினார்க்கினியர் கூறியுள்ள கருத்து, தொல்காப்பியர் கருத்துக்கு முரணானது என்று ச.சோ.பாரதியார் கூறியுள்ளார். (க.வெள்ளைவாரணனார், “தொல்காப்பியப் பொருளதிகார ஆய்வு” நாவலர் சோமசுந்தர பாரதியார் நினைவுச் சொற்பொழிவு, ப.14).

ஒரு மன்னனுக்குப் பிறர் மண்ணைக் கொள்ள வேண்டும் என்ற கருத்து மிக்க இருக்கிறது. பிற நாட்டு மன்னனின் இயல்பினை அறிந்து அவன் படையெடுப்பதற்கு முன்னர் தான் படையெடுத்துச் சென்று பேராசையுடைய மன்னனை வெற்றி கொண்டு அவன் கருத்தினை அழிக்க வேண்டும் என்று முயல்வது அரசர்களுக்குரிய அறங்களில் ஒன்று. இவ்வரச அறத்தினை உளங்கொண்ட தொல்காப்பியர் “எஞ்சா மண்ணசை வேந்தனை” என மற்றொரு வேந்தனையும் குறித்திருப்பது கருதத்தக்கது. எனவே அறிவுணர்வு அற்ற ஒருவனை அறவுணர்வோடு

கூடிய மன்னன், அவன் அஞ்சுமாறு சென்று தாக்குவதே வஞ்சித் திணையாகும் என்பது தொல்காப்பியர் கருத்தாகும். நச்சினார்க்கினியர் தொல்காப்பியர் கருத்தினை உளங்கொள்ளாமல் இரண்டு மன்னர்களும் வஞ்சித் திணைக்குரியவர்கள் என்று கூறியிருப்பது ஏற்புடையது அன்று என்பது ச.சோ.பாரதியாரின் கருத்தாகும். ச.சோ.பாரதியார் இந்நூற்பாவுக்குச் செம்பொருளையும் விளக்கிச் சென்றுள்ளதாக வெள்ளைவாரணனார் பாராட்டுகின்றார். (க.வெள்ளை வாரணனார், "தொல்காப்பியப் பொருளதிகார ஆய்வு" நாவலர் சோமசுந்தர பாரதியார் நினைவுச் சொற்பொழிவு, பக்.15, 16)

ஓதல், தூது ஆகிய இரண்டும் உயர்ந்தோர்க்குரியவை எனத் தொல்காப்பியர் கூறியுள்ளார். (க.வெள்ளைவாரணனார், "தொல்காப்பியப் பொருளதிகார ஆய்வு", ப.11). உயர்ந்தோர் என்பவர் யார் எனத் தொல் காப்பியர் விளக்கம் கூறவில்லை. இளம்பூரணர், நால்வகை வருணத் தாருள் உயர்ந்தோர் எனத் தொல்காப்பியர் கூறியது அந்தணர் அரசர் ஆகிய இருவரையும் குறிக்கும் என்பர். (க.வெ., தொல்.நன்.எழுத்து, ப.11).

நச்சினார்க்கினியர் அரசர், அந்தணர், வணிகர் என்ற மூவரையும் குறிக்கும் என்பதையே உயர்ந்தோர் எனச் சுட்டியுள்ளார் தொல்காப்பியர் என்பர். (க.வெ., தொல்.நன். எழுத்து, ப.11.)

நானில மக்களில் உயர்ந்தோர் எனவும் தாழ்ந்தோர் எனவும் தொல்காப்பியர் குறித்துள்ளார். வேந்தன், குறுநில மன்னன், படைத் தலைவன், வேந்தனால் சிறப்பு செய்யப் பெற்றோன் என்பவர்கள் உயர்ந்தோராகக் கருதப்படுவர். எனவே ஓதற்பிரிவு, தூது காரணமாகப் பிரியும் பிரிவு நானில மக்களில் இவ்வகையினருக்கு உரியது என்பது ச.சோ.பாரதியாரின் கருத்து. (க.வெள்ளைவாரணர், "தொல்காப்பியப் பொருளதிகார ஆய்வு, பக்.12,13).

நான்கு வருணம் என்பது ஆசிரியர்கள் கோட்பாடு. பண்டைத் தமிழ் மக்களிடத்தில் பிறப்பினால் உயர்வு தாழ்வு ஏற்படவில்லை. சாதிப் பிரிவினைகளும் இல்லை. தொல்காப்பியர் தமிழ் மரபினை ஒட்டி நானில மக்களையே குறிப்பிட்டுள்ளார் என்பது ச.சோ.பாரதியின் கருத்து என வெள்ளைவாரணனார் விளக்கம் அளித்துள்ளார். (கு.சுந்தரமூர்த்தி (பதி.,)., தொல். பொருள்.நச்சினார்க்கினியர் உரை, ப.118).

ச.சோ.பாரதியார், உரைகளை நோக்காது தொல்காப்பிய மூலத்தினை அடியொற்றியே உரை வரைந்துள்ளார். உரையாசிரியர்கள் கருத்துக் களில் இடம்பெற்றுள்ள அயலவரின் கருத்துக்களில் உள்ள பொருந் தாமையைப் புலப்படுத்தி உரை வரைந்துள்ளமையை வெள்ளை

வாரணனார் போற்றியுள்ளார்.

மூலநூல் கருத்திலிருந்து உரையாசிரியர்கள் மாறுபட்டுச் செல்கின்ற இடங்களை, ச.சோ.பாரதியார் எடுத்துக்காட்டி மறுத்துள்ளார். "மேலோர் நால்வர்க்கும் உரித்தே" (க.வெள்ளைவாரணர், "தொல் காப்பியப் பொருளதிகார ஆய்வு", ப.12) என்னும் நூற்பாவில் மேலோர் என்பது தேவரைக் குறித்தது என்பர் இளம்பூரணர். நச்சினார்க்கினியர் வணிகரைக் குறித்ததென்பர். (க.வெள்ளைவாரணர், "தொல்காப்பியப் பொருளதிகார ஆய்வு", ப.12) இவ்விரு உரையாசிரியர்கள் கருத்தையும் மறுத்து மேலோர் என்பது வேந்தரையும் வேந்தரைச் சார்ந்த வேளிர் முதலியோரையும் குறித்ததாகச் ச.சோ.பாரதியார் குறித்துள்ளார். (பாவல ரேறு ச.பாலசுந்தரம், தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை, பொருளதிகாரம் II, களவியல், ப.110) ச.சோ.பாரதியின் புத்துரையை வெள்ளைவாரணனார் போற்றியுள்ளார்.

இலக்கணக் கோட்பாடுகளை வரலாற்று நோக்கோடும் திறனாய்வு நோக்கோடும் வெள்ளைவாரணனார் அணுகியுள்ளார்.

பண்டைத் தமிழரின் பொருள் நெறிமரபு உரைக்கப்பட்ட நெறியை வெள்ளைவாரணனார் உடன்பட்டு மொழிந்துள்ளார்.

தொல்காப்பியம் முதலான பல்வேறு இலக்கண ஆசிரியர்களின் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் வெள்ளைவாரணனார் வாய்ப்பு நேருமிடங்களில் திறனாய்வு செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

வஞ்சித்திணையில் குறிக்கப்பெற்ற வேந்தர் இருவர் என்பதையும் அவர்கள் எத்தன்மையினர் என்பதையும் ச.சோ.பாரதியார் கூறியுள்ள விளக்கத்தினை வெள்ளைவாரணனார் ஏற்றுப் போற்றியுள்ளார்.

உயர்ந்தோர் என்று தொல்காப்பியர் குறித்துள்ளதற்கு, ச.சோ. பாரதியார் தமிழ் நெறியினை ஒட்டிக் கூறியுள்ள விளக்கத்தை வெள்ளை வாரணனார் உடன்பட்டு மொழிந்துள்ளார்.

உரையாசிரியர்கள் மாறுபட்டுச் செல்கின்ற இடங்களைச் ச.சோ.பாரதியார் மறுத்துள்ளார். மேலோர் என்பதற்குச் ச.சோ.பாரதியார் கூறிய புதிய விளக்கம் வெள்ளைவாரணனாரால் ஏற்று மொழியப்பட்டுள்ளது.

**புறத்திணையியல்**

மறஞ்செய்தலும் அறஞ்செய்தலுமாதலால் அவற்றாலாய பயன் பிறர்க்குப் புலனாதலின் புறமென்பார்.

இவ்வாறு உலகத்துப் பொருள் எல்லாவற்றையும் முதல், கரு, உரி என மூன்றாகப் பகுத்து அவற்றை அகம், புறம் என இருவகையாக வகுத்து விளக்குதல் பண்டைத் தமிழர் கண்டுணர்ந்த நெறி தொல்

காப்பியனாரும் முன்னோர் மரபினைப் பின்பற்றிப் பொருளிலக்கண வரம்பினைச் செய்து கொள்கின்றார்.

புறப்பொருள் உணர்த்துவதால் புறத்திணையியலென்னும் பெயர்த்தாயிற்று. புறமாவது அகம்போல் ஒத்த அன்புடையார் தாமேயன்றி எல்லாராலும் உய்த்துணரப்படுவதும், இஃது இவ்வாறிருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படுவதுமாகிய ஒழுகலாறாம். அறமும் பொருளும் பற்றிப் புறத்தே நிகழும் ஒழுக்கத்தைப் புறமென்பர். அன்பின் அடிப்படையில் நிகழும் அகத்திணை ஒழுகலாற்றை எழுதிணைப் படுத்தியது போலவே, அன்பின் வழுப்பட்டனவாய் அறமும் மறமும் பற்றிப் புறத்தே நிகழுஞ் செயல் முறைகளையும் எழுதிணைப் படுத்தியுரைப்பது பண்டைத்தமிழர் கண்டுணர்த்திய பொருளிலக்கண மரபாகும்.

வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் இவ்வேழும் புறத்திணைகளாகும். இவை முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை, கைக்கிளை எனவரும் அகத்திணை ஏழிற்கும் புறமாகும். புறத்திணை ஒழுகலாறுகளும் வெட்சி, வஞ்சி முதலிய பூக்களால் பெயர் பெறுவனவாயின. அத்திணைகளின் இயல்புணர்ந்தார்க்கன்றி அவற்றின் புறத்தவாகிய புறத்திணைகளும், அவற்றின் துறைவகைகளும் இனிது விளங்கவும் ஆசிரியர் தொல்காப்பியனார் அகத்திணை இலக்கணம் உணர்த்திப் பின்னர்ப் புறத்திணை இலக்கணம் உணர்த்தத் தொடங்கினார் எனலாம்.

இவ்வியலிலுள்ள சூத்திரங்களை முப்பதாக (30) இளம்பூரணரும், முப்பத்தாறாக (36) நச்சினார்க்கினியரும் பகுத்து உரை கூறியுள்ளார்கள்.

**குறிஞ்சித் திணைப்புறம்**

நிரைகோடலும் நிரைமீட்டலும் என்னும் பொருண்மையவாதலின் வெட்சி எனவும் கரந்தை எனவும் குறியீடுகளைப் பெற்றன.

**முல்லைப் புறம்**

மண்ணாசை வேட்கையால் எடுத்துச் செலவு புரிந்த வேந்தன் மேல் அடல்குறித்துச் செலவு புரிதலான் அவ்விரு பெருவேந்தரும் ஒருவினையாகிய செலவு புரிதலின் வஞ்சி என ஒரு குறிபெறும்" என்பர் இளம்பூரணர்.

**மருதத்துப்புறம்**

எயிலழித்தலும் எயில்காத்தலும் என்னும் வேறுபாடு குறித்து உழிஞையெனவும் நொச்சி எனவும் இரண்டு குறிபெறும் என்பர்.

**நெய்தற் புறம்**

இருபெருவேந்தரும் பொருதலாகிய ஒரு தொழிலே புரிதலால் அது தும்பை என ஒரு குறிபெற்றது.

**நடுவுநிலைத் திணையாகிய பாலைப்புறம்**

வேந்தரேயாயினும் ஏனையோராயினும் தமது மிகுதியாகிய வெற்றியைக் குறித்தலால் அது வாகை என ஒரு குறிபெற்றது.

**பெருந்திணைப் புறம்**

நிலையாமையாகிய நோம் திறப்பொருளே குறித்து வருதலின் காஞ்சி என ஒரு குறிபெற்றது.

**கைக்கிளைப் புறம்**

செந்திறமாகிய ஒரு பொருளே குறித்து வருதலின் பாடாண் என ஒரு குறிபெறுதலும் காணவியலும்.

**புறத்திணையின் தனித்தன்மை**

மனிதஇனந் தோன்றிய நாள்தொட்டே அது இயற்கையோடும் பிறஉயிர்களோடும் போராடியே வாழ்ந்து கொண்டிருக்கிறது. போர் உணர்ச்சிதான் மனிதனின் முதல் உணர்ச்சி. தற்காப்புக்காகவும், தனது தலைமைத் தன்மையை நிலைநிறுத்துதற்காகவும் மனிதன் போர் வல்லவனாயினான். புறச் சூழலில் போராடித் தன்னையழித்தும் பிறரை யழித்தும் வந்த மனிதச்சமுதாயம் கால வளர்ச்சியில் தன் மனநிலை யோடு போராட்டத்தை உருவாக்கிக் கொண்டது. புறப்போராட்டத்தை விட அகப்போராட்டமே மனிதனின் உயரிய வளர்ச்சிக்கு அடிப்படையாய்த் திகழ்ந்தது.

மனிதன் தோன்றி வளர்ந்த வரலாற்றை ஐவகையாகப் பிரித் துரைப்பர் அறிஞர் கெஸியட். ஐவகையுள் நான்காவது இனம் வீரர் இனமாகும். இக்காலத்துக்கு முன்னரும் மனிதன் போராட்டத்திலேயே தன்னை வளர்த்துக் கொண்டிருந்தான் என்றாலும், வீரர் இனக் காலத்தில் வீரவுணர்வு உச்சநிலை பெற்றிருந்தது.

ஒவ்வொரு நிலமக்கள் இனத்திலும் அவர்களின் அகப்புற வளர்ச்சிகளுக்கேற்ப வீரநிலைக் காலம் கணக்கிடப்பெறுகின்றது. கிரேக்கத்தின் வீரநிலைக் காலம் கி.மு.2000 என்பர். தமிழரின் வீரநிலைக் காலம் கி.பி. ஆறாம் நூற்றாண்டெனக் கருதுவார் டாக்டர் கைலாசபதி.

**போராட்ட உணர்வு:**

தொடக்கத்தில் மனிதன் தன் அன்றாட வாழ்க்கைத் தேவை களுக்குப் பிற உயிர்களிடத்துத் தனது ஆற்றலை வெளிப்படுத்தி வாழ நேர்ந்தது. உணவுக்கும் உடைக்கும் உறையுளுக்கும் ஒவ்வொரு மனிதனும் போராட்டம் நிகழ்த்துவது இன்றிமையாததாயிற்று. தன்னுடன் பிறந்த வர்கள், தனக்குப் பிறந்தவர்கள் என்ற உறவுநலம் பாராட்டாமலும் மனிதவினந் தனித்தனியே போர்நிகழ்த்திக் கொண்டிருந்தது.

ஆற்றல் மிகுந்த மனிதன் பிறரை அடக்கியாளத் தொடங்கினான்.

அச்சத்தினாலேயே பிறரும், அடங்கி வாழ்ந்தனர். இக்காலகட்டத்தில்தான் தனி ஒருவனின் வீரம் பாராட்டுதலுக்கும் பிறர் பின்பற்றுதலுக்கும் உரியதாயிற்று. மனித இனத்துக்குள் ஆற்றல் மிக்க இனம், ஆற்றல் மிகா இனத்தைப் பயன்படுத்தித் தன் செல்வாக்கை நிறுவிக் கொண்டிருந்தது. ஒருவனைத் தலைமையாகக் கொண்ட மக்களினம், வேறொருவனைத் தலைமையாகக் கொண்ட மக்களினத்தோடு போரிடுதல் இயல்பாயிற்று.

தனிமனித வீரம் ஒரு முழு வீரமாக வளர்ச்சியடைந்தது. இயற்கைப் பொருள்களிலிருந்து பல புதிய பொருள்களை உருவாக்கிக் கொண் டிருந்த மனிதயினம் போர்த்துறையிலும் படிப்படியான வளர்ச்சியை அடையலாயிற்று. பிறரை அழித்தலையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்த மனிதக்குழுக்கள் தம்மைக் காத்துக் கொள்ளுதலைச் சிறப்பாகக் கருதிய காலத்தில் நகரங்கள், அரசுகள், அரண்கள் முதலான பல்வேறு வளர்ச்சிகளைக் கண்டன. இங்ஙனம் வீர உணர்வு மிகச் சாதாரண நிலையிலிருந்து நாகரிகம் கலந்த உன்னத நிலையை அடைந்தது.

**போர் விளக்கம்**

போர் என்னும் பெயர்ச்சொல் 'பொரு' என்னும் வேர்ச் சொல்லடியாக வளர்ந்தது. இச்சொல் ஒத்திருத்தல் என்னும் பொருளை உணர்த்துவது. 'தமக்கொத்த ஆற்றல் உடையாரையும் ஏனை முதல், துணை வலி உடையாரையும் எதிர்த்துப் பொருதலே போர்' என்னும் கொள்கைக்குப் பொருளாகும். இங்ஙனம் போர் குறித்த விளக்கத்தினைத் தருபவர் கா.சு.பிள்ளை அவர்கள்.

தொல்காப்பியமும், சங்கவிலக்கியமும், வீர உணர்வையும், வீரர் களையும் பற்றிப் பேசினாலும் இவற்றினும் மேலாக மானம், புகழ், கொடை உணர்வுகளையும், சான்றோர், புலவர் கலைஞர் போன்றவர் களையும் மிகப் பாராட்டுகின்றன. இசை, நாடகம், இலக்கியம் என்ற நுண்கலைகளுக்குச் சிறப்புக் கொடுத்த ஒரு மனித சமுதாயம் வீரநிலைக் காலம் கடந்துவிட்டதை உணர்த்துகின்றது.

**வெள்ளைவாரணனாரின் ஆய்வுரை:**

ஆசிரியர் தொல்காப்பியனார் மக்கட்குலத்தார்க்கே சிறப்புரிமை யுடைய ஒழுகலாற்றினை அகம் எனவும் புறம் எனவும் இரு கூறுகளாகப் பகுத்து இலக்கணங் கூறியுள்ளார். பின்வந்த இலக்கண ஆசிரியர்கள் அகம் புறம் என்னும் அவ்விரு பகுதிகளையும் அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என நான்காகப் பகுத்து இலக்கணங் கூறினர்.

அகம், புறம் என்னும் இருவகைத் திணைப்பகுதியே தொன்மை யுடையதென்பது.

*அகத்திணை மருங்கின் அரில்தப வுணர்ந்தோர்*
*புறத்திணை யிலக்கணந் திறப்படக் கிளப்பின்*

எனவரும் தொல்காப்பிய நூற்பாவில் அகத்திணை, புறத்திணை எனத் திணைப் பகுப்பு இரண்டே குறிக்கப்பட்டிருத்தலால் உணரலாம். ஒரு தலைக் காமமாகிய கைக்கிளை, ஒத்த காமமாகிய அன்பின் ஐந்திணை, ஒவ்வாக் காமமாகிய பெருந்திணை ஆகிய அகத்திணை ஏழிற்கும் புறமாய் அவற்றோடு ஒருவாற்றால் தொடர்புடைய புறத்திணைகள் ஏழுள என்பதனையும், இப்பகுப்பு முறை முன்னைத் தமிழ்ச் சான்றோரால் வகுக்கப்பட்ட தொன்மையுடையது என்பதையும்

*'கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்*
*முற்படக் கிளந்த எழுதிணை யென்ப'*

எனவரும் நூற்பாவில் 'முற்படக்கிளந்த' என்ற தொடராலும் 'என்ப' என்னும் சொற்குறிப்பாலும் தொல்காப்பியனார் குறித்துள்ளமை காணலாம்.

'வெட்சி தானே குறிஞ்சியது புறனே'
'வஞ்சி தானே முல்லையது புறனே'
'உழிஞை தானே மருதத்துப் புறனே'
'தும்பை தானே நெய்தல் புறனே'
'வாகை தானே பாலையது புறனே'
'காஞ்சி தானே பெருந்திணைப் புறனே'
'பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே'

எனவரும் தொல்காப்பியத் தொடர்கள், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை, கைக்கிளை என்னும் அகத்திணை ஏழற்கும் முறையே வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்பன புறமாம் என முறைப்பட வகுத்துள்ளமை காணலாம்.

இங்குச் சொல்லப்பட்ட புறத்திணை ஏழனுள் குறிஞ்சித்திணைப் புறமாகிய வெட்சித்திணை பகைவர் நாட்டுப் பசுக்கூட்டத்தினைக் களவிற் கவர்ந்து கொள்ளுதலும் அப்பசு நிரைக்குரியோர் அதனை மீட்டுக் கொள்ளுதலும் ஆகிய தொழில் வேறுபாடு குறித்து முறையே வெட்சி எனவும் கரந்தை எனவும் இருபெயர்பெறும். முல்லைத்திணைப் புறனாகிய வஞ்சித்திணை, மண்ணசையாளன் ஆகிய வேந்தன்மேல் மற்றொரு வேந்தன் படையெடுத்துச் செல்ல அவனும் அவன்மேற்படையுடன் செல்ல, அவ்விருவரும் ஒருவரையொருவர் அடுதல் குறித்து மேல்செல்லுதலாகிய ஒரு தொழிலேபுரிதலின், அது வஞ்சி என ஒரே பெயர் பெறும். மருதத்துப் புறனாகிய உழிஞைத்திணை பகையரசனது அரணை வளைத்துக் கொண்டு அழித்தலும், அவ்வரணுக்கு உரிய மன்னன் பகைவர்க்கு இடங் கொடாது தனது அரணைக் காத்துக் கொள்ளுதலும் ஆகிய தொழில் வேறுபாடு குறித்து முறையே உழிஞை எனவும் நொச்சி எனவும் இருபெயர்

பெறும். நெய்தற்றிணைப் புறனாகிய தும்பைத்திணை தனது வன்மை யினை உலகத்தார் உயர்த்துப் புகழ்தலையே பொருளாகக் கருதிப் போர்மேற் கொண்டு வந்த வேந்தனை மாற்றானாகிய வேந்தனும் தனது ஆற்றலைப் புலப்படுத்தும் நோக்குடன் எதிர்த்துச் செல்ல அவ்விரு பெருவேந்தரும் ஒருகளத்துப் பொருதலாகிய ஒருதொழிலே புரிதலின் தும்பை என ஒருபெயர்பெறும். பாலைத்திணைப் புறனாகிய வாகைத் திணை வேந்தராயினும் ஏனையோராயினும் தத்தமது தொழிற்றிறத்தின் மிக்க மேம்படுதலாகிய வெற்றியினைக் குறித்தலால் வாகை என ஒரு பெயர் பெறும். பெருந்திணைப் புறனாகிய காஞ்சித்திணை நிலையாமை யாகிய துன்பப் பொருளையே குறித்து வருதலால் காஞ்சி என ஒருபெயர் பெறும். கைக்கிளைப் புறனாகிய பாடாண்திணை புலவர்பாடும் புகழுடைமையாகிய செந்திறம் என்னும் ஒருபொருளையே குறித்து வருதலின் பாடாண் என ஒருபெயர் பெறும் என விளக்குவர் இளம்பூரணர்.

**க.வெள்ளைவாரணனாரின் உரை வளம்:**

குறிஞ்சிப் புறனாகிய நிரைகவர்தல், நிரைமீட்டல் என்னும் இரு பகுதிகளுள் நின்று கவர்தற்பகுதியாகிய வெட்சித்துறைகளை விரித்துக் கூறிய தொல்காப்பியனார், நிரை மீட்டற் பகுதியாகிய கரந்தைத் துறை களையும், புறத்திணை எல்லாவற்றிற்கும் பொதுவாக உரிய மறத்துறை களையும், மறத்துறைகளை நிறைவேற்றி உயிர்துறந்த தெய்வநிலை பெற்ற வீரர்களின் பெயரும் பீடும் எழுதிக் கல் நிறுத்தி வழிபடும் முறையில் அமரர் சுட்டிச் செய்யப்படும் பெருஞ்சிறப்புடைய புறத்துறை களையும் விரித்துரைக்கின்றார்.

குறிஞ்சி நிலத்தெய்வமாகிய சேயோனுக்குச் செய்யும் வெறி என்னும் வழிபாட்டினையறிந்து நாட்டு மக்களுக்கு நலம் புரியும் சிறப்பினையும் 'தெய்வத்திற்குப் பலியிடுதல் வேண்டும் என உயிர்க் கொலை கூறுதலின் வெம்மைதரும் வாயினையும் உடைய வேலன் என்பான், தன் வேந்தற்கு வெற்றி வேண்டித் தெய்வத்தைப் பரவிய காந்தளும், இருதிறப் படைகளும் மாறுகொண்டு போர்விளைக்கும் போர்க்களத்திலே இன்ன வேந்தன் படையாளர் இவர் எனத் தம்மை அடையாளந் தெரிந்து கொண்டு பகைவரொடு பொருதற்கு வாய்ப்பாக மிகப்பெரிய தமிழ்ப் படை வீரர்கள் சூடிக்கொள்ளுதற்குரிய பனை வேம்பு ஆத்தி என்னும் மூவகைப் பூக்களும், தம் நாட்டார் வெற்றி பெறுதல் வேண்டி மகளிர் முருகனைப் பரவி யாடும் வள்ளிக் கூத்தும் (போர்க் களத்திற்) புறமுதுகிட்டு ஓடாமைக்குக் காரணமாக வீரர் அணிந்த கழலின் சிறப்பும், பின்னிடாது போர் செய்யவல்ல சினமிக்க வேந்தனது வெற்றியை உள்ளத்தில் எண்ணி, நாடாள் வேந்தனாகிய அவனுக்கு நன்மையும் தீமையும் புலப்படுத்தும் இயல்பினதாகிய உன்னம் என்னும் மரத்தொடு

பொருந்த நிமித்தங்கொள்ளுதலும், பூவைப்பூ மேனியாகிய மாயோனைப் போன்று தம் நாட்டினைக் காக்கவல்ல மன்னனது கெடாத பெரும் புகழாகிய பெருஞ்சிறப்பினைப் புகழ்ந்து போற்றுதலாகிய பூவை நிலையும், பொறுத்தற்கரிய போரின்கண் (வெட்சி மறவராகிய) பகைவரைப் புறங்கொடுத்து ஓடச் செய்தலும், (அவராற் கவர்ந்து கொள்ளப் பட்ட பசுக்களை மீட்டுத் தன்னாட்டிற் கொணர்ந்து தருதலும், புகழ் நிறைந்த தம் வேந்தனது சிறப்பினைப் படை மறவர் எடுத்துரைத்துப் பாராட்டுதலும், (வீரனொருவன்) தன்பாலமைந்த வஞ்சினத்தைத் தன்னொடு சார்த்திக் கூறுதலும், அங்ஙனம் நிரைமீட்டலை மேற்கொள்ளும் முறைமையினையுடைய வீரர்கள் போர்ப்பூவாக அணிந்த கரந்தையின் சிறப்புரைத்தலும், தம்மேல் எதிர்த்து வரும் சேனையின் முன்னணியாகிய தார் (தூசி)ப் படையினைத் தான் ஒருவனாகவே தனித்து நின்று தடுத்தலும் (அந்நிலையிற்) பகைவரது வாளாற் பட்டு வீழ்தலும் எனப் பின்விளைவறியாது மேற்கொள்ளும் போர்ச்செயல் களாகிய இருவகைப்பட்ட பிள்ளைநிலையும், வாளாற் பொருது பகைவரை வென்று மேம்பட்டு எழுந்த வீரனாகிய இளைஞனை அந்நாட்டவர்கள் மகிழ்ந்து அவனுக்குத் தம் நாட்டினைப் பரிசாக வழங்கிய பிள்ளை யாட்டும், போர்க்களத்து இறந்த வீரனைக் கல்லில் நிறுத்தி வழிபடுதற் பொருட்டு அதற்கு ஏற்புடைய கல்லைக்காணுதல், அக்கல்லினைக் கைக்கொள்ளுதல், கொண்ட கல்லினை நீர்ப்படுத்தித் தூய்மை செய்தல், அக்கல்லினை நடுதல், அங்ஙனம் நட்ட கல்லிற்குக் கோயில் எடுத்தல், அக்கல்லைத் தெய்வமாக்கி வாழ்த்துதல் என்று சொல்லப்பட்ட கற்கோள் நிலை ஆறும் பொருந்த இங்குச் சொல்லப்பட்ட இருபத்தொரு துறைகளை யுடையது குறிஞ்சிப் புறனாய் நிரைமீட்டற் பகுதியாகிய வெட்சியாகும் எ-று, இச்சூத்திரத்திலுள்ள 'எழுமூன்று' துறைத்து' என்னும் பயனிலைக்கு உரிய எழுவாயாக இரண்டாஞ் சூத்திரத்திலுள்ள 'வெட்சிதானே' என்பது இங்கு அதிகாரத்தால் வந்து இயைந்தது. ((புறத்திணை இயல் உரைவளம், பக்.80-82)

இது, வஞ்சித்திணைக்குரிய துறைகளை விரித்துரைக்கின்றது.

(இ-ள்) பகைவரொடு பொருதல் வேண்டி மேற்செல்லும் படை வீரர்களது போர் ஆரவாரமும், பகைவர் நாட்டினைத் தீக்கொளுவுதலால் எரிபரந்து கிளர்ந்தெழச் செய்தலும், மேற்செல்வோர் பகைவர் நாட்டு எல்லையிலே பேராற்றலுடன் விளங்கிய பெருமையும் (தன்னுடைய படை வீரர்க்கும் பாணர் முதலிய பரிசிலர்க்கும்) கொடுத்தலைப் பொருந்திய வண்மைத் திறமும், பகைவர் பலரையும் தொடர்ந்து மேலிட்டுக் கொன்ற வெற்றித் திறமும், வேந்தனாற் பெருஞ்சிறப்புப் பெற்ற படை மறவர் கூறிய மீக்கூற்று மொழியும், பகைவரைப் பொருட்படுத்தாது படைகளைச்

செலுத்தின பேராண்மைத் திறமாகிய தறுகண்மையும், மிக்கு விரைந்து மேல்வரும் பெருவெள்ளத்தைக் கல்லணை தடுத்துத் தாங்குதல்போன்று தம்மேல் மீதூர்ந்து தாக்கும் பகைவரது சேனை வெள்ளத்தைப் படைமறவன் ஒருவனே தடுத்துத் தாங்கிய பெருவன்மையும், வேந்தன் தன் படைவீரர் அனைவர்க்கும் திரட்சியாகப் பொருந்திய பேருண்டியினை விருப்புடன் வழங்கும் பெருஞ்சோற்றுநிலையும், மேற்சென்றுபொரும் போரில் வென்றார்க்கு உளதாகிய ஒளியென்னும் புகழ் விளக்கமும்.

போரில் தோல்வியுற்றோர் புகழென்னும் ஒளிகுன்றித் தேய்தலும், எக்காலத்தும் குறைதல் இல்லாத வென்றிச் சிறப்பினைப் பெறுதலாகிய கொற்றவள்ளையும், போர்முனையின் அழிவினைச் செய்யும் படைக் கலங்களைத் தடுத்து மெலிவுற்றாரைப் பேணித் தழுவிக் கொள்ளுதலாகிய தழிஞ்சி என்னுந்துறையொடு மிக்க பெருஞ்சிறப்புடைய பதின்மூன்று துறைகளையுடைது வஞ்சித்திணையாகும்.

'முழுமுதல் அரணம் முற்றுதலும் அழித்தலுமாய்' எனவரும் இவ்வுரைத் தொடரை 'முழுமதல் அரணம் முற்றுதலும் காத்தலுமாய்' எனத்திருத்திக் கொள்ளுதல் வேண்டும்.

"மருதத்துப்புறம் எயில் அழித்தலும் எயில்காத்தலும் என்னும் வேறுபாடு குறித்து உழிஞை எனவும் நொச்சி எனவும் இரண்டு குறி பெறும்" என இவ்வியலின் தொடக்கத்தே இளம்பூரணர் விளக்குதலால் அவ்விளக்கத்திற்கேற்ப 'முற்றலும் காத்தலுமாய் வருந்தன்மைத்தாகிய நெறியை மரபாகவுடைத்து என உரையில் திருத்தஞ்செய்து கொள்வதே உரையாசிரியர் கருத்துக்கு ஏற்புடையதாகும் என்கிறார் வெள்ளை வாரணனார் (புறத்திணை இயல் நூற்பா, ப.117).

இஃது உழிஞைத்திணையின் வகையுணர்த்துகின்றது

மதிலை முற்றுதலும் கோடலும் என இருதிறப்பட்டு நிகழும் உழிஞைத்திணை ஒவ்வொரு திறத்திற்கும் நான்கு நான்கு ஆகி எட்டு வகைப்படும்.

கொள்ளார் தேஎம் குறித்து கொற்றம் முதலாகச் சொல்லப்பட்டன உழிஞைத் துறையாம்.

கொள்ளார் தேஎம் குறித்து கொற்றமும் பகைவரது தேயத்தைக் கொள்ளக் குறித்த கொற்றமும். (கொள்ளார் தன்னை இறையெனக் கொள்ளாரும் தன் ஆணையைக் கொள்ளாரும்.)

உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும் - நினைத்தது முடிக்கலாகும் வேந்தனது சிறப்பும்.

இன்னும் 'உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்' என்றதனால் அகத்தரசனை அழித்தது கூறலும் கொள்க.

(1. தொல் எயிற்கு இவர்தலும் தோலின். 2. திறப்பட.

3. இஃது உழிஞையின் துறைவகையினை விரித்துரைக்கின்றது எனக் கருத்துரையமைத்தல் பொருத்தமாகும்.

4. கொள்ளார் பகைவர், இச்சொல் வேந்தனாகிய தனது ஆட்சித் தலைமையினை ஏற்றுக்கொள்ளாது முரணிநிற்போரையும் தனது ஆணையினை ஏற்றுக்கொண்டு அதன்வழி அடங்கி ஒழுகாதாரையும் குறித்து நின்றது. (புறத்திணை இயல் உரைவளம், ப.125)

இஃது உழிஞையின் நாலிருவகையினையும் விரித்துரைக்கின்றது.

பகைவரது நாட்டினைத் தான்வென்று கைக்கொள்வதற்கு முன்னமையே தான் விரும்பிய வண்ணம் வேண்டியவர்க்கு அந் நாட்டினைக் கொடுத்தலை விரும்பிய வெற்றித் திறமும், அங்ஙனம் தான் எண்ணியதனை எண்ணிய வண்ணமே முடிக்கவல்ல வேந்தனது பேராற்றலின் சிறப்பும், நெடுங்காலமாக அழிவின்றி நிலைபெற்றுள்ள மதிலின்மேல் ஏறிப்போர்செய்தலும், (மதிலின் அகத்திலிருந்து மாற்றார் எய்யும் அம்புகளைத் தடுத்தல் வல்ல) கிடுகுப்படையினையேந்திய மறவர்களின் மிகுதியும் (புறத்தோன்திறமாகிய) அதுவேயன்றி அவனொடு முரணிப் போர் புரியும் அரணகத்துள்ள வேந்தனது செல்வமிகுதியும் அம் மிகுதியால் தன்னொடுமாறுபட்ட புறத்தோனைப் பொருது அகத்தோன் வருந்திய கூறுபாடும், ஆற்றல்மிக்குத் தானொருவனுமேயாகிக் கிளர்ந்தெழுந்து மதிற்புறத்தே போந்து போர் புரியும் குற்றுழிஞையும் வெகுண்டு எயிலை அழித்தற்கு முந்தும் புறத்தோரது படையினைப் பொருட்படுத்தாது இகழ்ந்திருத்தற்கேற்ற அரிய வினைத்திறம் வாய்ந்த மதிலின் வன்மையும் உட்பட (புறத்தோற்கு நான்கும் அகத்தோற்கு நான்கும் என இருதிறமாகச்) சொல்லப்பட்ட எட்டு வகையினையுடையது அவ்வுழிஞைத்திணை என்பர் ஆசிரியர்.

இவற்றுள் முன்னைய நான்கும் மதிலை வளைத்துக்கொண்ட வேந்தனாகிய புறத்தோனுக்குரியன; பின்னைய நான்கும் மதிலழியாமற் பற்றிக்கொண்டு காக்கும் அகத்தோனுக்கு உரிய செயல்வகைகளாம் என்பார் 'சொல்லப்பட்ட நாலிரு வகைத்தே' என மீண்டும் தொகை கூறினார் ஆசிரியர். ((புறத்திணை இயல் நூற்பா, ப.133)

***தும்பை தானே நெய்தலது புறனே***
***மைந்துபொரு ளாக வந்த வேந்தனைக்***
***சென்றுதலை அழிக்குஞ் சிறப்பிற் றென்ப.***

***இளம்பூரணரும்: இது, தும்பைத்திணை என்கிறார்.***

தும்பை நெய்தலது புறம் தும்பை என்னும் திணை நெய்தல் என்னும் அகத்திணைக்குப் புறனாம், மைந்து பொருளாக வந்த வேந்தனை சென்று தலையழிக்கும் சிறப்பிற்று அது வலிபொருளாகப்

போர்கருதி வந்த அரசன்கண் சென்று அவனைத் தலையழிக்கும்' சிறப்பினையுடைத்து.

இதனானே "எதிரூன்றல் காஞ்சி" (பிங்க. அருபோக...) என்பாரை மறுத்தவாறு அறிக. அதற்கு இது புறனாயவாறு என்னையெனின் இருபெருவேந்தரும் ஒருகளத்துப் பொருதலின் அதற்கு இடம் காடும் மலையும் கழனியும் ஆகாமையானும், களரும் மணலும் பரந்தவெளி நிலத்துப் பொருதல் வேண்டுதலானும், அந்நிலம் கடல்சார்ந்த வழியல்லது இன்மையானும், நெய்தற்கு ஒதிய ஏற்பாடு போர்த்தொழிற்கு முடிவாதலானும் நெய்தற்குப் புறனாயிற்று.

1. *தலையழித்தல் தலைமையினைச் சிதைத்தல்;* வேந்தர்' யாவரினும் உரித்தோள் யானே எனக் கருதும் செருக்கினை அழித்தல். மைந்து வலிமை.

2. மைந்து பொருளாகவந்த வேந்தனை (எதிர்) சென்று தலைமை தீர்க்குஞ் சிறப்புடையது தும்பையெனவே மைந்துபொருளாகப் படை கொண்டு மேற்சேறல் வஞ்சி எனவும், அங்ஙனம் தன்மேற் படைகொண்டு வரும் வஞ்சி எனவும், வேந்தனை எதிரேற்று அவனுடன் பொருதல், இருபெருவேந்தரும் ஒருகளத்துப் பொருதலாகிய தும்பைத்திணையின் பாற்படும் எனவும் கொண்டு, "இதனானே '*எதிரூன்றல் காஞ்சி*' என்பாரை மருத்தவாறு அறிக" என்றார் இளம்பூரணர்.

எஞ்சாமண்ணசை வேந்தனை வேந்தன் அடுதல் குறித்து வரும் மேற்செலவாகிய வஞ்சியும், மைந்துபொருளாக ஒருகளத்து எதிர்நின்று பொருதற்குச் செல்லுதலாகிய தும்பையும் நோக்கத்தாலும் போர்நிகழும் இடத்தாலும், வேறுபட்ட தனித்தனித் திணைகளாதலின் வஞ்சித் திணைக்கு எதிராய் கதிர் செல்வது தும்பைத்திணையுள் அடங்கும் எனக் கொள்ளும் இளம்பூரணர் கூற்று தொல்காப்பியனார் கருத்துக்கு ஒத்ததாகத் தோன்றவில்லை என்கிறார் *வெள்ளைவாரணனார்* (புறத்திணை இயல் உரைவளம், ப.144).

**முடிவுரை:**

தமிழ் மொழியின் அமைப்பு காலந்தோறும் எவ்வாறு மாறுதல் அடைந்து வந்துள்ளது என்பதையும், தமிழ் மக்களின் வாழ்க்கை நிலை பழக்கவழக்கம் ஆகியவற்றையும் உரைகள் உணர்த்துகின்றன.

## செந்தமிழ்க் கல்லூரிக்குழு உறுப்பினர்கள்


| | |
|---|---|
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக் | தலைவர் |
| திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி M.Sc., M.Phil., | செயலாளர் |
| திரு. ச.மாரியப்ப முரளி M.A.,B.L., | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. ச.தசரதராமன் B.A.,B.L., | உறுப்பினர் |
| திரு. து.மாயராசன் B.Sc., B.L., | உறுப்பினர் |
| திரு. இரா.ஜெகனாதன் B.E., | உறுப்பினர் |
| திரு. லெ.சிவக்குமார் B.E., | உறுப்பினர் |
| திரு. ஜெ.பாலதண்டாயுதம் B.Sc., | உறுப்பினர் |
| திரு. கி.ராஜாராம் B.A., | உறுப்பினர் |
| முனைவர் க.பாலகிருஷ்ணன் | பல்கலைக்கழக நியமன உறுப்பினர் |
| முனைவர் சு.விஜயன் | உறுப்பினர் |
| முனைவர் கி.வேணுகா | உறுப்பினர் |

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

## ஆசிரியர் குழு

முனைவர் திரு. **தமிழண்ணல்**

பெரும்புலவர் திரு. **இரா. இளங்குமரன்**

முனைவர் திரு. **அ.அ. மணவாளன்**

முனைவர் திரு. **கதிர்மகாதேவன்**

முனைவர் திரு. **தி.முருகரத்தனம்**

முனைவர் திரு. **பெ. சுயம்பு**

முனைவர் திரு. **இ. மறைமலை**

RNI Regd. No.5508/57 December 2014 MA/130/2014-2016
Posted at Madurai BPC on 25th of every month

# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்



(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் 8+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707, நிகரி: 0452 - 4373475

- ♦ இளம் இலக்கியம்
- ♦ இளங்கலை
- ♦ முதுகலை
- ♦ இளம்நிலை ஆய்வாளர்
- ♦ முதுநிலை ஆய்வாளர்
- ♦ பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

## சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

முனைவர் சு.விஜயன்
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
மதுரை - 625 001

From
**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, INDIA

பெறுநர்/To,

வெளியிடுபவர்: ச.மாரியப்பமுரளி M.A.,B.L.,செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1 ✆ 0452 - 2343455
பதிப்பாசிரியர்: இரா.சதாசிவம், 2/861, ராசராசன் தெரு, மதுரை - 20, செல்:94874 45403
அச்சகம்: ஜெயஸ்ரீ கிராபிக்ஸ், காமராஜர்சாலை, மதுரை-9.